www.penakural.com

மலர்: 04 இதழ்: 01 நவம்பர் 2025 Vol.: 04 Issue: 01 November 2025 ₹ 20/-

# பேனா குரல்

# PENA KURAL

RNI No.: TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்




Subzero Cool Tech
AC REPAIR
SERVICE
&
RENT
AT YOUR DOOR STEP
AC REPAIR
INSTALLATION
MAINTENANCE
AMC SERVICE
We Repair all Brands
Uninstallation
Gas Filling
Air Duct Cleaning
HIGH QUALITY
PREMIUM
SERVICE
CONTACT US
Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil,
Chennai - 600097.
SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

# பேனா குரல்

PENA KURAL தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 04 இதழ்: 01 நவம்பர் 2025

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : N V சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா.S, B.E.,

சிறப்பு ஆசிரியர் : M. ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர் : K. ராமசுப்ரமணியன்

இணை ஆசிரியர் : K. ரமேஷ்குமார்

துணை ஆசிரியர்கள்:

துரை. சந்துரு, ந.மதிவாணன், P.கார்த்திகேயன், S.மோகன்

தலைமை நிருபர்கள்:

R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், B.நவின்குமார், H.காஞ்சன், சங்கரன்

நிருபர்கள்:

Ba.சரவணன், K.கலைமணி, அன்புமணி, தமிழ் வீரன், D.பாமா, D.ராஜேஷ், K.மாரிதுரை

புகைப்பட நிருபர்கள்: V.கவியரசன், கபில்

ஓவியம் & புகைப்பட நிருபர்: V.சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்கள்:

M. குணசீலன், B.Com.,M.L., Government of India, Central Government Additional Standing Counsel

G. சத்தியநாராயணன், B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:

Tamilni Printz & Graphics - 8754582123

நிர்வாக அலுவலகம்:

பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:

044-35906002, 8754582123

info@penakural.com

news@penakural.com

www.penakural.com

பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, மற்றும் விளம்பரங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *



# தேசிய பாதுகாப்புக்கு புதிய சவால்!

கடந்த சில தினங்களுக்கு முன்பு டெல்லி செங்கோட்டை அருகே சிக்னலில் நின்றிருந்த ஹூண்டாய் ஐ-20 கார் திடீரென வெடித்து சிதறியது மேலும் வெடிப்பின் தீவிரத்தால் அருகிலிருந்த வாகனங்களும் எரிந்து நாசமாயின. சம்பவ இடத்தில் 25 மீட்டர் சுற்றளவில் மனித உடல் பாகங்கள் மற்றும் காரின் சிதறல்கள் பரவி கிடந்தன.

கண்காணிப்பு கேமரா காட்சிகள் மூலம், முகத்தில் கருப்பு முகக்கவசம் அணிந்த நபர் அந்த காரை இயக்கியிருப்பது கண்டறியப்பட்டது. இதில் 13 பேர் உயிரிழந்ததும், 24 பேர் காயமடைந்ததும் உறுதி செய்யப்பட்டுள்ளது. விசாரணையில், குர்கானைச் சேர்ந்த சல்மான் என்ற நபரின் பெயரில் வாங்கப்பட்ட கார் பின்னர் புல்வாமாவைச் சேர்ந்த தாரிக் என்பவரிடம் சென்றது தெரியவந்தது.

மேலும் இதற்கு முன்பு அக்டோபர் 19-ஆம் தேதி ஸ்ரீநகரில் பாகிஸ்தானின் பயங்கரவாத அமைப்பு "ஜெய்ஷ்-இ-முகமது" ஆதரவாக போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. இதையடுத்து காஷ்மீரைச் சேர்ந்த சில டாக்டர்கள் பாகிஸ்தான் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்தது அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், பெண் மருத்துவர் ஷாகீன் ஷாகித் உள்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 2,900 கிலோ வெடிபொருட்கள், துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், மற்றும் 20 டைமர்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையில், வடமாநிலங்களில் மக்கள் கூட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் தொடர் வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்த திட்டமிட்டிருந்தது தெரியவந்தது.

டெல்லி கார் வெடிப்பு வழக்கில் கைதானவர்கள் மற்றும் இந்த டாக்டர்கள் குழுவுக்கிடையில் தொடர்பு இருந்தது விசாரணையில் வெளிச்சமிட்டுள்ளது. குறிப்பாக, வெடித்த காரின் உரிமையாளர் தாரிக், அதை புல்வாமாவைச் சேர்ந்த டாக்டர் உமர் நபிக்கு விற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது மேலும் டாக்டர் உமருக்கும், வெடிபொருட்களுடன் கைது செய்யப்பட்ட டாக்டர்களுக்கும் நேரடி தொடர்பு இருப்பது, இது பெரிய சதித் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகிறது.

இந்நிலையில், இந்தியாவின் பாதுகாப்பு அமைப்புகள் - போலீஸ், உளவுத்துறை மற்றும் தேசிய புலனாய்வு முகமை (NIA) - எப்போதும் அதிக விழிப்புடன் செயல்பட வேண்டிய அவசியத்தை இந்த சம்பவம் மீண்டும் வலியுறுத்துகிறது.

– ஆசிரியர்




சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திமுக இளைஞரணி சார்பில் திமுக 75 - அறிவுத் திருவிழா என்ற நிகழ்ச்சி வெகுவிமர்சையாக நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் முதல்வரும், திமுக தலைவருமான முக.ஸ்டாலின் தலைமை தாங்கி கலந்து கொண்டு விழாவைத் தொடங்கி வைத்து பின்னர் காலத்தின் நிறம் - கருப்பு சிவப்பு - திமுக 75" என்ற புத்தகத்தையும் வெளியிட்டு இளைஞர்களை நோக்கி உற்சாக உரையாற்றினார்.

அவ்வுரையில் இது சாதாரண கட்சி அல்ல - அறிவின் இயக்கம் எனவேதான் இந்த விழாவுக்கு அறிவுத் திருவிழா என்று பெயர் வைத்திருக்கிறார் உதயநிதி இதைவிடப் பொருத்தமான தலைப்பு வேறில்லை, ஏனெனில் திமுக 75 ஆண்டுகள் என்பது வெறும் அரசியல் வரலாறு இது சமூக முன்னேற்றத்தின், சிந்தனையின், அறிவின் வரலாறு திமுக ஒரு பொதுவுடைமை இயக்கமாக உருவாகி, சாதாரண மக்களின் கட்சியாக வளர்ந்தது நமது முன்னோடிகள் அரசியல் ஆசை காரணமாக அல்ல, சமூக மாற்றத்துக்காக போராடினார்கள் ஒரு கடைக்கோடி தொண்டர் வரை மக்கள் மத்தியில் பணியாற்றினர்.

மேலும் திமுக வரலாற்றை நினைவூட்டியபோது, திராவிட இயக்கம் எவ்வாறு கிராமங்கள் வரை ஊடுருவியது என்பதை எடுத்துரைத்தார், அந்த நாட்களில் டீக்கடை, சலூன் எல்லாம் சிந்தனை மையங்களாக மாறின திமுகவினர் உலகப் புரட்சிகளைப் பற்றிச் சொல்லி மக்களின் விழிப்புணர்வை வளர்த்தனர் அதுவே நம்முடைய வலிமை திமுகவின் வெற்றி வரலாறு யாராலும் மீண்டும் உருவாக்க முடியாது என ஸ்டாலின் பெருமையுடன் கூறியவர், ஆனால்

தற்போதைய அரசியல் சூழ்நிலையைப் பற்றி பேசும் போது கடும் கண்டனம் தெரிவித்தார். திமுகவை கொள்கை ரீதியாக வீழ்த்த முடியாததால், சிலர் இப்போது தேர்தல் ஆணையம் வழியாக குறுக்கு வழியில் திமுகவை வீழ்த்த முயற்சி செய்கிறார்கள் அதுதான் 'சார்' (SIR) முயற்சி என்று அவர் சாடினார். ஏன் தேர்தல் நெருக்கத்தில் இத்தகைய சாரை அவசர அவசரமாக நடத்த வேண்டும்? அனைத்து கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்தபோதும், தேர்தல் ஆணையம் அதைத் தொடங்கியுள்ளது.

இதற்கு எதிராக சட்ட ரீதியிலும், அரசியல் ரீதியிலும் நாங்கள் போராடுவோம், தொடர்ந்தும் போராடுவோம் என கூறினார் மேலும் முதல்வர் திமுக இளைஞரணியினரிடம் முக்கிய கோரிக்கை ஒன்றையும் வலியுறுத்தினார், வாக்காளர் பட்டியலில் எந்த போலி பெயரும் இடம்பெறாதபடி நீங்கள் களப்பணியில் ஈடுபட வேண்டும் உண்மையான வாக்காளர்கள் விடுபடாமல் பார்த்துக் கொள்ளுங்கள் நம் வாக்குரிமையை நாமே காப்பாற்ற வேண்டும். மேலும், விழாவில் வெளியிடப்பட்ட காலத்தின் நிறம் - கருப்பு சிவப்பு புத்தகத்தில் உள்ள கட்டுரைகளை வீடியோவாக மாற்றி சமூக ஊடகங்களில் பரப்பி இளைஞர்களைச் சேர்த்திடுங்கள் என்றவர்,

உரையின் நிறைவில் நம் போராட்ட வரலாறு தியாகத்தின் வரலாறு திராவிட மாடல் ஆட்சி இந்தியாவுக்கே வழிகாட்டியாக மாறியுள்ளது எனவே எதிரிகள் எவ்வளவு சதி செய்தாலும், திமுகவை யாராலும் வீழ்த்த முடியாது 2026-லும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையும் என்று உற்சாகமாக கூறினார்.

மேலும் இந்த உரையின் மூலம் முதல்வர் ஸ்டாலின், திமுகவின் கொள்கை நிலைப்பாட்டையும், இளைஞர்களின் பங்கு முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியதுடன், தேர்தல் ஆணையம் தொடர்பான சர்ச்சையை எதிர்க்கும் திடமான அரசியல் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அறிவிப்புகளை துரிதமாக நிறைவேற்ற அதிகாரிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தல்




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் பொது மற்றும் மறுவாழ்வுத் துறை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் பணிபுரியும் தமிழர்கள் எதிர்பாராத முறையில் உயிரிழந்தால், அவர்களின் குடும்பத்தினருக்கு மாத ஓய்வூதியம் வழங்கும் திட்டம், சுயதொழில் தொடங்க விரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கு கடனுதவி, மேலும் அவர்களுக்கு பாதுகாப்பான வீடுகள் அமைக்கும் இரண்டாம் கட்ட திட்டம் ஆகியவை குறித்து முதல்வர் ஆய்வு மேற்கொண்டார்.

இதன் பகுதியாக, 18 மாவட்டங்களில் உள்ள 34 முகாம்களில் 3,919 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. முன்னாள் படைவீரர்களுக்கான புதிய விடுதியின் பணிகளும் விரைவாக முன்னேறி வருகின்றன.

2021–2026ம் ஆண்டுக்குள் பொது மற்றும் மறுவாழ்வுத் துறையில் அறிவிக்கப்பட்ட 90 திட்டங்களில் 68 முடிவுற்றுள்ளன. மீதமுள்ள திட்டங்களை விரைவில் நிறைவேற்ற அதிகாரிகள் தீவிரம் காட்ட வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

அதேநேரத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை தொடர்பான கூட்டத்திலும் முக்கியமான திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில், பசுமை தமிழ்நாடு இயக்கம், முதல்வரின் பசுமை புத்தாய்வு திட்டம், மற்றும் வனவிலங்குகளுக்கான அவசர சிகிச்சை மையங்கள் (கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில்) ஆகியவை அடங்கும்.

மேலும், சென்னைக்கு அருகே தாவரவியல் பூங்கா, மரக்காணத்தில் பன்னாட்டு பறவைகள் மையம், தஞ்சாவூரில் கடற்பசு பாதுகாப்பு மையம், திண்டுக்கல் மாவட்டம் அய்யலூரில் தேவாங்கு பாதுகாப்பு மையம், மற்றும் பழவேற்காடு ஏரியில் சூழலியல் சுற்றுலா வசதிகள் அமைக்கும் பணிகளின் முன்னேற்றத்தையும் முதல்வர் பரிசீலித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டங்களில், அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் விரைவாக நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு பயன்படுமாறு அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தினார்.




மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 15.11.2025 அன்று சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் நடைபெற்ற அரசு விழாவில் அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுவினரின் தயாரிப்பு பொருட்கள் கண்காட்சியினை பார்வையிட்டு குழுவினருடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், திரு. எஸ்.மாங்குடி, திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., திருப்புவனம் பேரூராட்சித் தலைவர் திரு.த.சேங்கை மாறன், சிங்கம்புணரி பேரூராட்சித் தலைவர் திரு.ந.அம்பலமுத்து, துணைத் தலைவர் திரு. பி.செந்தில்குமார் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் 15.11.2025 அன்று இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2025 புதுடெல்லியில் நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவைக் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.கே.பிரகாஷ் (ஈரோடு), திரு.க.ஈஸ்வரசாமி (பொள்ளாச்சி), தமிழ்நாடு அரசின் உள்ளுரை ஆணையர் திரு. ஆஷீஷ் குமார், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள், இணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு. கு.தமிழ் செல்வராஜன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# பல்லாவர சந்தையில் காலாவதியான சமையல் பொருட்கள்!

## திகைத்த அதிகாரிகள்! அதிர்ச்சியில் மக்கள்!

சென்னை பல்லாவரத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை அன்றும் போடப்படும் வாரச்சந்தை மிகவும் பேமஸானது. ஏனெனில் ஊசி முதல், ஏசி வரை செகண்ட் ஹேண்ட் மற்றும் புதிய பொருட்கள் என அனைத்து பொருட்களும் மிகக்குறைந்த விலையில் விற்பனைக்குக் கொண்டு வரப்படும்.

மேலும் அதை வாங்குவதற்காக சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மட்டுமின்றி, சென்னை முழுவதும் இருந்து ஏராளமானோர் வருவார்கள். இந்நிலையில் சமீப காலமாக இங்கு தரம் குறைந்த மற்றும் காலாவதியான உணவுப் பொருட்கள் அதிக அளவில் விற்பனை செய்யப்படுவதாகச் செங்கல்பட்டு மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன் அடிப்படையில் உணவு பாதுகாப்புத் துறை அதிகாரி ரமேஷ் பாபு தலைமையில் ஏழு பேர் அடங்கிய குழுவினர், பல்லாவரம் வாரச்சந்தையில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். அப்பொழுது சென்னை பாடியைச் சேர்ந்த ஐயப்பன் என்பவரால் போடப்பட்டிருந்த கடையில் அதிகாரிகள் சோதனை நடத்தியதில் காலாவதியான பிஸ்கட், மசாலா மற்றும் அரிசி, பருப்பு உள்ளிட்டவற்றின் பாக்கெட்டுகளில் அவற்றின் எக்ஸ்பைரி தேதியை இருந்த இடம் தெரியாமல் அழித்து, குறைந்த விலைக்கு விற்று வந்ததை கண்டுபிடித்தனர். ஒன்றல்ல இரண்டல்ல சுமார் 500 கிலோ எடையுள்ள பொருட்கள் ஐயப்பனின் கடையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

எனவே அவற்றை மொத்தமாக பறிமுதல் செய்த அதிகாரிகள், ஐயப்பனை பிடித்து பல்லாவரம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். அதனைத் தொடர்ந்து எங்கிருந்து அவருக்கு காலாவதியான பொருட்கள் கிடைத்திருக்கும்? இதில் வேறு யாருக்கெல்லாம் தொடர்புள்ளது? என்பது குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் ஐயப்பனுக்கு கலாவதியான பாக்கெட் உணவுப் பொருட்களைக் கைமாற்றிய நபர்களும் சிக்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பொருட்கள் விலை குறைவாகக் கிடைக்கிறது என்பதை மட்டும் பார்க்காமல், அவற்றின் தரத்தை சோதித்துப் பார்த்து எக்ஸ்பைரி தேதிகளையும் சரிபார்த்து, வாங்குமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# தமிழக அரசியல் களம் ஓர் அலசல்

தமிழக அரசியல் களம் எப்போதும் பரபரப்புக்குப் பஞ்சமில்லாதது. குறிப்பாக, 2026 சட்டமன்றத் தேர்தலை நோக்கிய தற்போதைய அரசியல் சூழல் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆட்சியில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க), பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.தி.மு.க), அண்மையில் தொடங்கப்பட்ட தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க) மற்றும் பிற கட்சிகளின் நிலைப்பாடு என, தமிழக அரசியல் களம் புதிய திருப்பங்களைச் சந்தித்து வருகிறது.

**தி.மு.க: ஆட்சியைத் தக்கவைக்கும் முனைப்பு**

தற்போதைய ஆளுங்கட்சியான தி.மு.க., முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. கடந்த 2021 தேர்தலில் பெற்ற வெற்றியின் உற்சாகத்துடன், அதன் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வலுவாக உள்ளது. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் மாநிலத்தில் பெற்ற மிகப்பெரிய வெற்றியும், அக்கூட்டணியின் பலத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

**தற்போதைய நிலை:**

- **ஆட்சியின் செயல்பாடு:** 'மகளிர் உரிமைத் தொகை', 'காலை உணவுத் திட்டம்' போன்ற மக்கள் நலத் திட்டங்கள் மூலம் தி.மு.க. மக்களின் மத்தியில் தனது பிம்பத்தை வலுப்படுத்த முயன்று வருகிறது. இத்திட்டங்களின் வெற்றி, கட்சியின் தேர்தல் பிரசாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும்.
- **சவால்:** ஆளும் கட்சிக்கு எதிரான இயற்கையான அதிருப்தி, சில அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகள் மற்றும் விலைவாசி உயர்வு போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளை எதிரணிகள் பிரதான ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடும்.
- **நோக்கம்:** 2026-லும் ஆட்சியைத் தக்கவைப்பதே மு.க.ஸ்டாலினின் இலக்காக உள்ளது. வலுவான கூட்டணிக் கட்சிகளை ஒருங்கிணைத்து, எதிரணிகளைத் திறம்பட எதிர்கொள்ள தி.மு.க. தயாராகி வருகிறது.

**அ.தி.மு.க: ஒற்றைத் தலைமை vs மீண்டெழும் முயற்சி**

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு பல சவால்களைச் சந்தித்து வரும் அ.தி.மு.க., தற்போது எடப்பாடி கே. பழனிசாமி ஒற்றைத் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. அ.தி.மு.க-வில் ஏற்பட்ட உட்கட்சிப் பூசல்கள் முடிவுக்கு வந்து, இ.பி.எஸ்.ஸின் தலைமை பலமடைந்துள்ள நிலையில், அதுவே கட்சியை 2026 தேர்தலுக்குத் தயார்படுத்தும் முக்கிய அம்சமாகும்.

**தற்போதைய நிலை:**

- **கூட்டணி நிலை:** கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.-வுடனான கூட்டணியில் இருந்து வெளியேறியது அ.தி.மு.க-வின் முக்கிய முடிவாகப் பார்க்கப்படுகிறது. தி.மு.க. மற்றும் பா.ஜ.க. ஆகிய இரு கட்சிகளுக்கும் மாற்றாகத் தனித்தன்மையுடன் களமிறங்க அ.தி.மு.க. முனைப்புக் காட்டுகிறது.
- **மீண்டெழ முயற்சி:** ஒற்றைத் தலைமைக்குள் கட்சி ஓரளவு வந்துள்ளதால், அடுத்தகட்டமாக தி.மு.க. அரசின் குறைபாடுகளைக் குறிவைத்து வீரியமான போராட்டங்களை முன்னெடுக்கிறது. முன்னாள் முதலமைச்சர் என்ற முறையில் இ.பி.எஸ்., ஆட்சிக்கான மாற்றுத் தலைமை என்ற நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.
- **சவால்:** ஓ.பன்னீர்செல்வம் மற்றும் டி.டி.வி. தினகரன் போன்றவர்களால் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு ஒரு முடிவுக்கு வந்தாலும், வாக்கு வங்கியில்



அதன் தாக்கம் குறைய வேண்டியது அவசியம். கூட்டணி இல்லாமல் தனித்து நின்று வாக்குகளை அள்ள வேண்டிய சவாலும் உள்ளது.

**தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.):**

நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.) 2026 தமிழக அரசியலின் ஒரு புதிய புள்ளி. ரசிகர்கள் ஆதரவுடன் அரசியலில் குதித்துள்ள விஜய், தனது கட்சியின் இலட்சியம் 2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதே என்று வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

**தற்போதைய நிலை:**

- **மக்கள் ஈர்ப்பு:** விஜய்யின் தனிப்பட்ட செல்வாக்கும், இளைஞர்கள் மத்தியில் அவருக்கு உள்ள வரவேற்பும் த.வெ.க.-வின் பலமாகும். இது திராவிடக் கட்சிகளுக்கு எதிரான மாற்றத்தை விரும்பும் புதிய வாக்காளர்களைக் கவர வாய்ப்புள்ளது.

- **அரசியல் அனுபவம்:** கட்சி தொடங்கி குறுகிய காலமே ஆவதால், தேர்தல் கட்டமைப்பை உருவாக்குவது, நிர்வாக ரீதியாகக் கட்சி அமைப்பை பலப்படுத்துவது, கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பது போன்ற சவால்களை உடனடியாக எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

- **போட்டியின் தன்மை:** த.வெ.க. நேரடியாக அனைத்து இடங்களிலும் தனித்துப் போட்டி-யிட வாய்ப்புள்ளது. இதனால், தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.வின் வாக்குகளில் ஒரு பகுதியை இது பிரிக்கக்கூடும் என்ற கருத்து பரவலாக உள்ளது.

**பிற கட்சிகளின் வியூகம்:** கூட்டணிச் சதுரங்கம் 2026 தேர்தல் முடிவில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கியக் கட்சிகளின் நிலைப்பாடு:

**பா.ம.க. (பாட்டாளி மக்கள் கட்சி):**

அன்புமணி ராமதாஸ் தலைமையிலான பா.ம.க., வடமாவட்டங்களில் கணிசமான வாக்கு வங்கி கொண்டது. அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து பா.ஜ.க. விலகிய நிலையில், பா.ம.க. யாருடன் கூட்டணி வைக்கும் என்பது முக்கியமான கேள்வி. கடந்த காலங்களில் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய இரு திராவிடக் கட்சிகளுடனும் கூட்டணி வைத்துள்ளது. எந்த அணியில் சேரப்போகிறது என்பது தேர்தல் களத்தின் பிரதான பேசுபொருளாக உள்ளது.

**வி.சி.க. (விடுதலைச் சிறுத்தைகள் கட்சி):**

தொல். திருமாவளவன் தலைமையிலான வி.சி.க., தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் மிக உறுதியான சக்தியாக உள்ளது. பா.ஜ.க. மற்றும் மதவாத அரசியலுக்கு எதிரான உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள வி.சி.க., தலித் மற்றும் சிறுபான்மை வாக்குகளைத் திரட்டுவதில் கூட்டணிக்கு முக்கிய பலமாக உள்ளது. தி.மு.க.வுடனான கூட்டணியைத் தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

**காங்கிரஸ்:**

இந்திய தேசிய காங்கிரஸ், தி.மு.க. கூட்டணியின் தவிர்க்க முடியாத அங்கம். தேசிய அளவில் பா.ஜ.க.-வுக்கு எதிரான அணியில் இருப்பதால், தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி-யிலேயே அதன் பயணம் தொடரும். எனினும், கூட்டணியில் அதிக இடங்களைப் பெறுவது குறித்து உள் விவாதங்கள் இருக்கக்கூடும்.

**பா.ஜ.க. (பாரதிய ஜனதா கட்சி):**

பா.ஜ.க கட்சி தமிழகத்தில், அ.தி.மு.க. கூட்டணியுடன் சேர்ந்து தாமரை மலர வேண்டும் என்ற இலக்குடன் செயல்படத் தயாராகிறது. கூட்டணி இல்லாமல் தேர்தலை எதிர்கொண்டால், அதனால் ஏற்படும் தாக்கம் குறித்து அரசியல் பார்வையாளர்கள் மத்தியில் விவாதம் உள்ளது. தங்கள் தலைமையை வலுப்படுத்தி, திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாகத் தேசியக் கட்சியை நிலைநிறுத்த முயற்சிக்கும்.

**வருங்காலத் திசை: முடிவில்லா யுத்தம்**

மொத்தத்தில், 2026 சட்டமன்றத் தேர்தல் களத்தில், தி.மு.க. தனது ஆட்சியின் சாதனைகளை முன்வைத்து வெற்றியைத் தக்கவைக்க முயலும். அதே சமயம், அ.தி.மு.க. பிளவுகளிலிருந்து மீண்டு, பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக மீண்டெழ போராடும். இவற்றுக்கிடையே, த.வெ.க. என்ற புதிய கட்சி, தமிழ்நாட்டு அரசியலில் ஒரு மாற்று சக்தியாகத் தன்னை நிலைநிறுத்த முயற்சிக்கும். பா.ம.க.வின் கூட்டணி முடிவும், பா.ஜ.க.-வின் போட்டியும் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் முக்கியப் பங்காற்றும் என்பதில் சந்தேகமில்லை. 2026 தமிழக அரசியல் களம், திராவிடக் கட்சிகள், புதிய கட்சிகள் மற்றும் தேசியக் கட்சிகளின் பலப்பரீட்சைக் களமாக இருக்கும்.




# S.I.R நடப்பும்! எதிர்ப்பும்!!

# வாக்காளர் செய்ய வேண்டியதும்!

நான் - நீங்கள் - நாம் இந்தியக் குடிமகன் / குடிமகள் தானா என்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாக Special Intensive Revision (SIR) எனும் சிறப்புத் தீவிர திருத்தப் பணியை பிகாரைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் 04.11.2025 முதல் தொடங்கி உள்ளது இந்தியத் தேர்தல் ஆணையம்.

1951 முதல் 2002 வரை 8 முறை சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இருப்பினும், நடந்து முடிந்த பிகார் SIRல் 69,00,000 வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கியதன் வழியே இந்த SIR2025 நாடு முழுவதும் பதற்றத்தைப் பற்ற வைத்து உள்ளது.

பிகாரில் நீக்கியவர்களை தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்களில் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்பையும் வழங்கி உள்ளதால், மாநில - மக்கள் உரிமை சார்ந்து சிந்திக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புகளும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமும் தனக்கென தனித்த பண்பாட்டு & அரசியல் கூறுகளைக் கொண்டு இருக்கின்றன.

தொழில் நிமித்தம் மாநிலம் தாண்டி கூட்டம்கூட்டமாகப் புலம்பெயர்வோருக்கு அங்கு வாக்கு உரிமை வழங்குவதால் அத்தகைய கூறுகளில் குறிப்பாக மாநில அரசியலில் விரும்பத்தகாத தாக்கங்கள் ஏற்படக்கூடும் என்பதே SIR2025ஐ எதிர்க்கும் அரசியல் கட்சிகளின் முதன்மைக் குரலாக உள்ளது.

அடுத்ததாக, பிறந்த நாள் & இடத்தை உறுதிசெய்ய SIR2025 முன்வைக்கும் ஆவணங்கள் அவ்வளவு எளிதானவை அல்ல.

இதனால் வாக்கு உரிமை பறிபோக வாய்ப்பு உள்ளதாக அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.




SIRஆல் வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டால்... 'ஓட்டுப் போடலேனா போயிட்டு போவுது, நான் இந்தியன் இல்லைனு சொல்லீற முடியுமா?' என்றால்... சொல்ல முடியாது என்று உறுதிபடச் சொல்லிவிட முடியாது. நாளை எதுவேண்டுமானாலும் நடக்கலாம்.

ஏனென்றால் SIR2025 முன்வைக்கும் விதிகள் & தேதிகள் முழுக்க முழுக்க டிசம்பர் 2019ல் திருத்தப்பட்ட 'இந்தியக் குடிஉரிமைச் சட்டம் 1955 (Act No.57 of 1955)' சார்ந்தவையே.

ஆம். 12.12.2019ல் கொண்டுவரப்பட்ட Citizenship Amendment Act (CAA)ன் படி NRC (National Register of Citizens) பதிவு ஏடு ஆக்கப் பணிகள் தொடங்கப்பட்டன.

இதில் இந்தியக் குடிமக்களின் குடியுரிமையே கேள்விக்கு உரியதாகக் குறிப்பிட்டு நாடு தழுவிய CAA எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து அப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன / தொடரப்படவில்லை.

தற்போதைய SIRன் வழியே மறைமுகமாக CAA நாடு முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட்டு உள்ளது.

**என்ன சொல்கிறது இந்தியக் குடி உரிமைச் சட்டம் 1955** (Act No.57 of 1955):

THE CITIZENSHIP ACT, 1955ல் பல்வேறு சேர்க்கைகள் / மாற்றங்கள் தொடர்ந்து செய்யப்பட்டுள்ளன. அதன்படி The Citizenship (Amendment) Act 2003 (Act 6 of 2004), Act 2005 (Act 32 of 2005), Act 2015 (Act 01 of 2015) என்று அடுத்தடுத்து புதுப்பிக்கப்பட்டு, 12.12.2019ல் இறுதியாக Act 2019 (Act 47 of 2019) சேர்க்கப்பட்டு THE CITIZENSHIP ACT, 1955 (Act No.57 of 1955) இறுதி செய்யப்பட்டதன் அடிப்படையில் அதன் 3வது சரத்து ஒருவரை இந்தியக் குடிமகன் தான் என்பதை அவரது பிறப்பின் அடிப்படையில் பின்வருமாறு உறுதி செய்கிறது.

1. 01.07.1987ற்கு முன் பிறந்து இருக்க வேண்டும்.
2. 01.07.1987 முதல் 01.12.2004 வரை பிறந்தவர் எனில் அவரது தாய் / தந்தை இந்தியராக இருந்தல் வேண்டும்.
3. 02.12.2004ற்குப் பின் பிறந்தவர் எனில் அவரது தாய் & தந்தை இருவருமே இந்தியராக இருந்தல் வேண்டும்.

இந்த 3 விதிகளின் அடிப்படையில் தான் SIR2025க்கான தேதியை இ.தே.ஆ வகைப்படுத்தியிருக்கிறது.

**SIR2025க்கான வரையறைத் தேதிகள் என்னென்ன?**

04.11.2025ல் தொடங்கப்பட்டுள்ள SIR2025 Phase-II மூன்று தேதிகளை வரையறுத்து அதைப்பொறுத்தே ஒவ்வொரு வாக்காளரும் தான் இந்தியரா? / இந்தியப் பெற்றோருக்குப் பிறந்தவரா? என்பதை உரிய ஆவணங்களின் வழியே தனக்கு உறுதிப்படுத்த வேண்டும் என இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

**1) ஜூலை 1, 1987:**

THE CITIZENSHIP ACT 1955 குறிப்பிட்டு இருந்த 01.07.1987 தேதிய இந்தியக் குடியுரிமை அடிப்படையில் 2002 - 2004 காலகட்டத்தில் இறுதியாக SIR நடத்தப்பட்டது.

புகாரின் பேரில் தமிழ்நாட்டின் 37 தொகுதிகளில் மட்டும் 2005ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அதன் படியான இறுதித் தீவிரத் திருத்த வாக்காளர் பட்டியல் SIR 2002 தான் தற்போதைய SIRக்கான முதன்மை ஆவணம்.

இந்தப் பட்டியலில் பெயர் உள்ளோர் அதாவது 01.07.1987க்கு முன்னர் பிறந்து 2002ல் 18 வயது நிறைவு பெற்று, அப்போது வாக்காளர் பட்டியலில் இணைக்கப்பட்ட வாக்காளர்கள் தற்போது தங்கள் குடி உரிமையை மெய்ப்பிக்க புதிதாக எந்த ஆவணமும் அளிக்கத் தேவை இல்லை.

SIR 2002 பட்டியலில் உள்ள பாகம் எண் & வரிசை எண் உள்ளிட்டவற்றை BLO வழங்கும் Enumeration Formல் அளித்தால் போதும்.

**2) ஜூலை 1, 1987 டிசம்பர் 1, 2004:**

தாய் தந்தை இருவரில் யாரேனும் ஒருவர் இந்தியராக இருந்தால் மட்டுமே 01.07.1987 முதல் 01.12.2004 வரை பிறந்தவர்களை இந்தியக் குடிமகனாக அங்கீகரிக்க முடியும் என்கிறது.

THE CITIZENSHIP ACT 1955 (57 of 1955).

இதன்படியே மேற்படி காலகட்டத்தில் பிறந்தவர்கள் தங்களது தாய் / தந்தையின் பெயர் SIR2002ல் இருப்பின் அதனை BLO வழங்கும் Enumeration Formல் குறிப்பிட வேண்டும் என SIR2025ல் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

கூடுதலாகத் தனது பிறந்த தேதி / இடத்திற்கான ஆவணத்தையும் வைத்து இருக்க வேண்டும்.

**3) டிசம்பர் 2, 2004க்குப் பின்:**

THE CITIZENSHIP ACT 1955 (57 of 1955) தாய் & தந்தை இருவருமே இந்தியராக இருந்தால் மட்டுமே 02.12.2004க்குப் பின்னர் பிறந்தவர்களை இந்தியக் குடிமகனாக ஏற்க முடியும் என்கிறது.

எனவே SIR2025, 02.12.2004க்குப் பின்னர் பிறந்தவர்கள் தாய் & தந்தை இருவரின் பெயரையும் SIR2002ல் இருந்து எடுத்து BLO வழங்கும் Enumeration Formல் குறிப்பிட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

கூடுதலாக தன் பிறந்த தேதி / இடத்திற்கான ஆவணத்தையும் வைத்து இருக்க வேண்டும். அந்த... SIR2002 எங்கு & எப்படிக் கிடைக்கும்?

உங்களது இல்லம் தேடி Enumeration Form கொண்டு வரும் BLO வைத்து இருப்பார்.

அதுவரை காத்து இருக்க முடியாது என்றால், https://erolls.tn.gov.in/Rollpdf/SIR_2002.aspx என்ற தளத்தில் சென்று 2002ல் உங்களது பெயர் இருந்த மாவட்டம், சட்டமன்றத் தொகுதி & வாக்குச்சாவடியைத் தேர்வு செய்து PDFஆகத் தரவு இறக்கிக் கொள்ளலாம்.

PDFலயெல்லாம் தேட முடியாது என்றால், https://erolls.tn.gov.in/electoralsearch/ என்ற தளத்தில் சென்று பெயர் / வாக்காளர் அடையாள அட்டையின் வழி தேடி பெயரை உறுதி செய்து கொள்ளலாம். பலருக்கு வாக்காளர் எண் இடம்பெறவில்லை என்பதால் PDF வழி தேடுவதே நல்லது.

**SIR 2002ல் பெயரே இல்லை எனில், என்ன செய்வது?**

மேற்படி 3 காலகட்டங்களுக்கு உட்பட்டோர் தமது / தமது பெற்றோரின் பெயர் SIR 2002ல் இல்லையெனில், சார்ந்தோரின் பிறந்த தேதியையும் இடத்தையும் மெய்ப்பிக்க 13 வகையான ஆவணங்களைப் பட்டியல் இட்டு உள்ளது தேர்தல் ஆணையம்.

இதில் 12வது ஆவணமான ஆதார் அட்டை சும்மா பெயருக்காக மட்டுமே. இது அடையாள ஆவணம் மட்டுமே; குடி உரிமைக்கான ஆவணம் அல்ல என்பதை அந்த ஆதார் அட்டையிலேயே போட்டிருப்பாங்க. நாம அதைப் படிச்சிருக்க வாய்ப்பு குறைவே.

(இதுக்கு எதுக்குடா பிறப்பு - இறப்பு வரை அம்புட்டுக்கும் அத்தையே ஆதார ஆவணமா கேக்குறீகனுலாம் கேக்கப்படாது.)

அப்பறம் அந்த 13வது வேறு ஒன்றும் இல்லை பிகார் SIR தான். இது உங்களுக்கு இல்லை; பிகாரில் நீக்கப்பட்ட 69,00,000 பேரில் தமிழ்நாட்டில் வேலை செய்வோரை இங்கு வாக்காளராகச் சேர்ப்பதற்கான ஆவணம்.

அவுக அப்பா அம்மா பேரு அங்க (பீகார் SIRல்) இருந்தா இவுகள இங்க சேர்த்துக்கலாம்.

ஏனெனில் பீகார் SIRல் உள்ளோர் மட்டும்தான் இன்றைய தேதியில் இந்தியத் தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டுள்ள இந்திய குடிமக்கள்.

அந்த இந்தியக் குடிகளின் மக்களும் இந்தியக் குடிமக்கள் தானே! பிறந்த தேதி / பிறப்பிடத்திற்கான 11 வகையான ஆவணங்கள்:

1. அரசு / பொதுத்துறை ஊழியர் (/ ஓய்வூதியர்) அடையாள அட்டை
2. 01.07.1987க்கு முன் பெறப்பட்ட அரசு / வங்கி / அஞ்சலகம் / LIC அலுவலகம் வழங்கிய ID Card / Certificate / Documents
3. பிறப்புச் சான்று
4. கடவுச்சீட்டு (Passport)
5. SSLC Marksheet / Degree Certificate
6. நிரந்தர வசிப்பிடச் சான்று (Nativity Certificate)
7. பழங்குடியினருக்கான வன உரிமைச் சான்றிதழ்
8. சாதிச் சான்றிதழ்
9. தேசிய குடிமக்கள் பதிவேடு
10. குடும்பப் பதிவேடு
11. அரசு நில ஒதுக்கீட்டுச் சான்றிதழ்

மேற்கண்ட 11ல் ஏதாவது ஒன்றின் வழியே உங்களது / பெற்றோரது பிறந்த தேதி & பிறப்பிடத்தை மெய்ப்பிக்க வேண்டும்.

# தவறுதலான ஒப்பந்தத்தால் தடுமாறும் மின்சார பேருந்து திட்டம்-கோடிக் கணக்கில் நஷ்டம்?

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் எரிபொருள் செலவைக் குறைக்கவும் பெருகிவரும் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தவும் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொண்ட மின்சாரப் பேருந்துத் திட்டத்தின் மூலம் அரசு 1,225 மின்சார தாழ்தளப் பேருந்துகளை வாங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக, 610 பேருந்துகளுக்கு அசோக் லேலண்ட் நிறுவனத்தின் துணை நிறுவனமான 'ஓம் குளோபல் மொபிலிட்டி' உடன் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதில், 400 ஏ.சி. அல்லாத பேருந்துகளும், 225 ஏ.சி. வசதியுள்ள பேருந்துகளும் அடங்கும் இந்த பேருந்துகளை இயக்குவது, பராமரிப்பது, மின்சாரம் சார்ஜிங் நிலையங்களை அமைப்பது உள்ளிட்ட முழுப் பொறுப்பையும் 'ஓம் குளோபல் மொபிலிட்டி' நிறுவனமே ஏற்கும். போக்குவரத்து கழகம் நடத்துநர்களை மட்டும் நியமித்து, டிக்கெட் வருவாயை ஈட்டும் வகையில் ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக 120 பேருந்துகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஜூலை 1ஆம் தேதி தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து, பெரும்பாக்கம் பணிமனையிலிருந்து 55 மின்சாரப் பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. மேலும்

திட்டத்தின் நோக்கம் உன்னதமாக இருந்தாலும், ஒப்பந்தத்தின் நிபந்தனைகளே அரசுக்கு நிதிச் சுமையை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது. ஒப்பந்தத்தின் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், பேருந்துகள் இயங்கினாலும் சரி, அல்லது பணிமனையில் நின்று கொண்டிருந்தாலும் சரி, ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வாடகையாக அரசு கொடுத்தே ஆகவேண்டும்.

அதாவது தற்போது இயக்கப்படும் ஒவ்வொரு மின்சாரப் பேருந்துக்கும் நாள் ஒன்றுக்கு சுமார் ரூ.18,000 வாடகையாக அரசு செலுத்தி வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், ஒரு பேருந்தின் மூலம் டிக்கெட் விற்பனை மூலம் ஈட்டப்படும் சராசரி வருவாய் வெறும் ரூ.7,000 மட்டுமே இருக்கும் சூழலில், மீதமுள்ள ரூ.11,000 தொகையை தமிழக அரசு தனது சொந்த நிதியிலிருந்து வாடகையாகச் செலுத்தி வருகிறது.



மேலும் 12 ஆண்டு ஒப்பந்தம் மூலம் மொத்தம் 610 பேருந்துகளுக்கும் இந்த வாடகைக் கட்டணம் வழங்கப்படுவதால், அரசுக்குக் கோடிக் கணக்கில் நஷ்டம் ஏற்படுவதாக விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும், இந்த ஒப்பந்தம் 12 ஆண்டுகளுக்குப் போடப்பட்டு உள்ளதால், இந்தக் காலக்கெடு முழுவதும் அரசு தொடர்ந்து நிதிச் சுமையைச் சுமக்க நேரிடும். எனவே எரிபொருள் செலவைக் கட்டுப்படுத்தத் தொடங்கப்பட்ட ஒரு திட்டம், அதற்குக் குறைந்த செலவைக் கொண்டு இருக்க வேண்டிய மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்திலேயே வருவாயை விட பல மடங்கு அதிக நிலையான வாடகைக் கட்டணத்தைச் செலுத்துவது, நிர்வாக ரீதியான ஒரு தவறான முடிவாக மாறி வருகிறதோ என்ற அச்சம் எழுந்து உள்ளது.

இது பற்றி அரசியல் விமர்சகர் கூறுகையில் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் எரிபொருள் செலவைக் குறைக்கவும் பெருகிவரும் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தவும் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொண்ட மின்சாரப் பேருந்துத் திட்டம், தற்போது நிதிச் சுமை குறித்த கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. மேலும் அதிக பொருட்செலவில், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகத் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், ஒப்பந்தத்தின் அம்சங்களால் 'தோல்வித் திட்டமாக' மாறுவதாகவும் எனவே இந்த ஒப்பந்தம் குறித்து, தமிழக அரசு உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் அரசியல் விமர்சகர்கள் மத்தியில் வலுத்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

# திமுக அரசு மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை மண்ணுக்குள் புதைந்துவிட்டது: விஜய்

திமுக அரசு மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை மண்ணுக்குள் புதைந்துவிட்டதாக தவெக தலைவர் விஜய் விமர்சித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் விஜய் தலைமையில் சென்னை அருகே மாமல்லபுரத்தில் இன்று கூடியது. இதில், கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வரவேற்புரை ஆற்றினார். இதைத் தொடர்ந்து கரூர் கூட்ட நெரிசலில் சிக்கிய உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானம் உட்பட 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொதுக்குழுவின் இறுதியாக விஜய் தலைமையுரை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது: நமது குடும்ப உறவுகளை இழந்ததால் சொல்ல முடியாத வேதனையுடனும், வலியுடனும் இத்தனை நாட்களாக நாம் இருந்தோம். அந்தச் சூழலில் அவர்களுடன் சேர்ந்து அமைதி காத்து வந்தோம்.

அமைதி காத்து வந்த நேரத்தில் நம்மைப் பற்றி வன்ம அரசியல் வலைகள், அர்த்தமற்ற அவதூறுகள் பிண்ணப்பட்டன, பரப்பப்பட்டன. இவை அனைத்தையும் சட்டம் மற்றும் சத்தியத்தின் துணைக் கொண்டு நாம் துடைத்தெறியத்தான் போகிறோம்.

அதற்கு முன்பாக தமிழக சட்டமன்றத்தில் நமக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட ஓர் உரைக்கு ஒரு நாகரிக பதிலடி கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அரசியல் செய்ய விருப்பவில்லை, அரசியல் செய்ய விருப்பமில்லை என அடிக்கடிச் சொல்லும் முதல்வர், பெருந்தன்மையை பெயரளவில் மட்டுமே பேசும் முதல்வர், 15.10.2025 அன்று தமிழக சட்டப்பேரவையில் நமக்கு எதிராகப் பேசிய பேச்சில் எவ்வளவு வன்மத்தைக்கக்கியுள்ளார் என்பதையும் எப்படிப்பட்ட ஒரு அரசியலைச் செய்ய முயல்கிறார் என்பதையும் தமிழக மக்கள் உணராமலா இருப்பார்கள்?

கரூரோடு சேர்ந்து 5, 6 மாவட்டங்களில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை நாம் நடத்தி இருக்கிறோம். அங்கே எல்லாம் கடைசி நிமிடம் வரை அந்த இடத்தைக் கொடுப்பார்களா மாட்டார்களா என்றே தெரியாது. நான் நாகையில் சொன்னதுபோலத்தான், மக்கள் நெருக்கடி இல்லாமல் இருப்பதற்கு ஏற்ப நாங்கள் ஓர் இடத்தை தேர்வு செய்து கேட்போம். ஆனால், மக்கள்நெருக்கடியோடு நிற்பதற்கு ஏற்ற



ஓரிடத்தை தேர்வு செய்து கொடுப்பார்கள். எல்லா இடத்திலும் இப்படித்தான் நடக்கும்.

அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே எந்த ஒரு அரசியல் தலைவருக்கும் இல்லாத கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பேருந்துக்குள்ளேயே இருக்க வேண்டும், மேலே வந்து கை காட்டக்கூடாது. இப்படி அதீத கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டபோது இது தொடர்பாக நாங்கள் ஒரு அறிக்கையை வெளி-யிட்டோம்அனைத்து கட்சிகளுக்கும் சமமான முறையான ஒரு பொதுவழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றத்தையும் நாடினோம். இதையும் தமிழக மக்கள் உணராமலா இருப்பார்கள்?

அரசியல் காழ்ப்புணர்வுடன் நேர்மை திறமற்று நம்மைப் பற்றி குற்றம் சாட்டியுள்ள குறுகிய மனம் கொண்ட முதல்வருக்கு ஒரு சில கேள்விகளை முன்வைக்கிறேன். 13.10.2025 அன்று உச்ச நீதிமன்றத்தில் நடந்த அந்த விவாதங்களை வைத்தும் உத்தரவுகளை வைத்தும் இந்த கேள்விகளை முன்வைக்கிறேன்.

பொய் மூட்டைகளை நமக்கெதிராக அவிழ்த்துவிட்ட முதல்வருக்கும் திமுக அரசுக்கும் ஆதரவாக வாதாடுவதற்காக கோடிகளைக் கொட்டி அமர்த்தப்பட்ட அறிவார்ந்த வழக்கறிஞர்கள், இந்த கபட நாடக திமுக அரசின் தில்லுமுள்ளுகளை தாங்கிப் பிடிக்க முடியாமல் உச்ச நீதிமன்றத்தில் திக்கித் திணறி நின்றது முதல்வருக்கு மறந்துவிட்டதா?

கரூர் சம்பவத்துக்குப் பிறகு அவசர அவசமாக ஒரு தனி நபர் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த தனி நபர் ஆணையத்தையும் அவமதிக்கும் வகையில் அரசு உயர் அதிகாரிகள், காவல்துறை உயர் அதிகாரிகள் நம்மைப் பற்றி அவதூறு பரப்பி ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத்தினார்கள். அவசர அவசரமாக இவை எல்லாம் ஏன் நடக்கிறது? எதற்காக

நடக்கிறது? என ஒட்டுமொத்த தமிழக மக்களும் கேள்வி கேட்க தொடங்கினார்கள். இதையும் தமிழக முதல்வர்மறந்துவிட்டாரா? அதன்பிறகு, அந்த தனி நபர் ஆணையத்தையே தலையில் கொட்டி வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அது வேறு விஷயம்.

இப்படி எல்லாம் கேள்வி கேட்ட உடனேயே, அவற்றுக்கு பதில் சொல்ல வேண்டுமல்லவா? சட்டமன்றத்தில் பேசும்போது உண்மை நிலையை தெளிவுபடுத்த ஏதோ சட்ட ரீதியாகவும் சத்தியத்தின் படியும் பேசுவதாக நினைத்துக்கொண்டு முதல்வர் ஏதேதோ பேசினார். 50 வருடமாக பொது வாழ்க்கையில் உள்ள ஒருவர், ஒரு முதல்வர் எவ்வளவு பெரியவடிகட்டிய பொய்யைப் பேசியுள்ளார் என்பதை நான் சொல்லவில்லை, உச்ச நீதிமன்றமே சொல்லி உள்ளது.

அரசு காவல் உயர் அதிகாரிகள் ஊடகங்களிடம் பேசியது, நியாயமான விசாரணை நடக்குமா என்ற சந்தேகத்தை பொதுமக்களிடையே ஏற்படுத்தக்கூடும் என்றும் நியாயமான விசாரணையின் மூலம் அந்த சந்தேகத்தை மீட்டெடுத்தே ஆக வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தமிழக அரசின் தலைமையில் ஓங்கி நறுக்கு நறுக்கு நறுக்கென்று கொட்டியதை முதல்வர் மறந்துவிட்டாரா?

சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதி சிறப்பு விசாரணைக் குழு அமைத்து உத்தரவிட்டார் அல்லவா? அந்த உத்தரவை ஏதோ சட்டத்தின் மீதும் நீதி பரிபாலனத்தின் மீதும் மரியாதை கொண்டவர்கள் போல ஒரு நாடகத்தனமான கொண்டாட்டத்தை திமுகவும் திமுகவுக்கு ஒத்து ஊதுபவர்களும் கொண்டாடி குதூகளித்தார்கள் அல்லவா? தவெகவுக்கு எதிராகவும் நமக்கு எதிராகவும் உயர் நீதிமன்ற நீதியரசர் தீர்ப்பளித்துவிட்டதாக விதந்தோதி விழா எடுத்தனர் அல்லவா?

அந்த உத்தரவைப் பற்றி சொல்லும்போது, எந்த ஆவணத்தின் அடிப்படையில் அந்த உத்தரவு அமைக்கப்பட்டது என உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. அப்போதும்கூட உச்ச நீதிமன்றத்தில் திமுக அரசுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞர்கள் பதில் சொல்ல முடியாமல் வாய்மூடி மவுனம் காத்ததை நாடே பார்த்ததல்லவா? இதையும் முதல்வர் மறந்துவிட்டாரா?

பொது வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் வந்த ரிட் மனுவை நீதிபதிகள் டிவிஷன் பெஞ்ச்தான் கையாள வேண்டும், தனி நீதிபதி கையாளக்கூடாது என உச்ச நீதிமன்றம் சொன்னதல்லவா? அதுமட்டுமா, கோரிக்கையே இல்லாமல் சிறப்பு விசாரணை குழு அமைத்தது எந்தவகையில் சரி என்றும்உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. இவை எல்லாமே அறியாமலோ அல்லது அறியாதது போலவோ உச்சபட்ச அதிகார மயக்கத்தில் இருந்து முதல்வர் பேசினாரோ? மனிதாபிமானம், அரசியல் அறம், மாண்பு இவை எதுவுமே இல்லாமல், வெறும் பேச்சில் மட்டுமே பேசிக்கொண்டு அரசியல் ஆதாயம் தேடும் ஆட்டத்தை ஆடத் தொடங்கிவிட்டார் முதல்வர்.

இவை அவர்களுக்கு புதிதா என்ன? 1969க்குப் பிறகு, இன்னும் சரியாகச் சொல்வதென்றால் 1972க்குப் பிறகு இவர்களை கேள்வி கேட்க ஆளே இல்லாமல் போய்விட்டது. இந்த கேள்விகள் எல்லாம் நான் கேட்டதல்ல, உச்ச நீதிமன்றம் கேட்டவை . இதில் இருந்து என்ன புரிய வருகிறது. அரசு நடத்தும் விசாரணை மேல் சந்தேகம் வருகிறது என்றால் அதற்கு என்ன அர்த்தம். உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று அர்த்தம். இவை ஏன் எதற்கு என்று முதல்வருக்குப் புரிகிறதா?

உச்ச நீதிமன்றம் சொன்னதால் மட்டுமல்ல, உண்மையாகவும் இந்த அரசு மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை மண்ணுக்குள் புதைந்துவிட்டது. இதுவாவது முதல்வருக்குப் புரிகிறதா? புரியவில்லை என்றால், 2026 தேர்தலில் இந்த திமுக தலைமைக்கு மக்கள் ஆழமாக அழுத்தமாக புரிய வைப்பார்கள். அப்போது கூட இவர்கள் என்ன செய்வார்கள் என்பது தெரியும்தானே. ஐந்து வருடத்துக்கு ஒருமுறை பழக்க தோஷத்தில் ஒரு அறிக்கை வெளியிடுவார்களே, மக்கள் தீர்ப்புக்கு தலை வணங்குகிறோம் என்று. அப்படி அறிக்கை வெளியிட்டுவிட்டு அறிவாயலத்தில் ஓடி ஒளிந்து கொள்வார்கள். அவர்களுக்குச் சொல்கிறேன், இப்போதே அந்த அறிக்கையை தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

கடந்த பொதுக்குழுவில் சொன்னதைத்தான் நான் மீண்டும் சொல்கிறேன். இயற்கையும் இறைவனும் நம் தமிழக சொந்தங்களின் வடிவில் மாபெரும் மக்கள் சக்தியாக நம் உடன் நிற்கும்போது எம்மக்களுக்கான அரசியலை தடுப்பவர் எவர்? நமக்கு தற்போது வந்துள்ள இடையூறு தற்காலிகமானதே. எல்லாவற்றையும் தகர்த்தெறிவோம், மக்களுடன் கைகோர்த்து நிற்போம், மக்களோடு களத்தில் நிற்போம், நமது பயணத்தில் தடம் மாறவே மாட்டோம்.

இப்போதும் சொல்கிறேன், 2026ல் இரண்டே இரண்டு பேருக்கு நடுவில்தான் போட்டி. ஒன்று திமுக, மற்றொன்று தவெக. இந்த போட்டி இன்னும் வலிமையாக மாறப் போகிறது. 100% வெற்றி நமக்கே. வாகை சூடுவோம். வரலாறு படைப்போம். நம்பிக்கையோடு இருங்கள். வெற்றி நிச்சயம்.

# பீகார் தேர்தலுக்கு மத்தியில் 2,400 மெகாவாட் பாகல்பூர் மின்திட்ட டெண்டர் அதானி வசமானது எப்படி?

பீகார் மாநிலத்தின் மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்காக, பகல்பூர் திட்டத்திற்கு மாநில அரசு ஒரு திறந்தவெளி டெண்டரை வெளியிட்டது.

ஏல செயல்முறையை நேரடியாக அறிந்த வட்டாரங்களின்படி, நான்கு தகுதிவாய்ந்த ஏலதாரர்கள் டெண்டரில் பங்கேற்றனர். அதானி பவர் ₹6.075/ kWh (அல்லது ஒரு யூனிட்) என்ற குறைந்த மின்சாரக் கட்டணத்தை மேற்கோள் காட்டி, குறைந்தபட்ச ஏலதாரராக (L1) உருவெடுத்தது.

இந்தக் கட்டணத்தில் ₹4.165 நிலையான கட்டணமாகவும், ₹1.91 எரிபொருள் கட்டணமாகவும் அடங்கும். மாநில அரசு இந்த கட்டணத்தை "மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தது" என்று வர்ணித்துள்ளது. மத்தியப் பிரதேசத்தில் இதேபோன்ற சமீபத்திய ஏலங்கள் அதிக நிலையான கட்டணங்களை மேற்கோள் காட்டியதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

டோரண்ட் பவர் ₹6.145/யூனிட் உடன் இரண்டாவது குறைந்த ஏலதாரராகவும், லலித்பூர் பவர் ஜெனரேஷன் கோ லிமிடெட் ₹6.165 ஆகவும், JSW எனர்ஜி ₹6.205/ யூனிட் ஆகவும் மேற்கோள் காட்டின.

வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக மின்னணு ஏல செயல்முறை நிலையான அரசு நடைமுறைகளின் கீழ் நடத்தப்பட்டது. அனைத்து ஏலங்களும் மின்னணு ஏல நடைமுறையைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டன.

மின் திட்டத்தில் அதானி திட்டமிட்டுள்ள சுமார் ₹30,000 கோடி முதலீடு, தொழில்துறை செயல்பாடுகளை அதிகரிப்பதிலும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பிரச்சாரத்தின் மத்தியில், இந்த திட்ட ஒதுக்கீடு பீகாரில் அரசியல் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்னாள் மத்திய அமைச்சர் ஆர்.கே. சிங், மின் கொள்முதலில் "மோசடி" என்று குற்றம் சாட்டியதை காங்கிரஸ் பயன்படுத்திக் கொண்டு, ஆளும் பாஜகவை தாக்கி வருகிறது.

காங்கிரஸ் தலைவர் கே.சி.வேணுகோபால் தனது எக்ஸ் தளத்தில் அதானி குழுமத்திற்கு பீகாரில் சிவப்பு கம்பள வரவேற்பு கிடைப்பதாகவும் மேலும் பீகாரில் ₹6/யூனிட் என்ற அதிக விலைக்கு மின்சாரம் வாங்குவதற்கான முன்மொழிவானது ஏழை மற்றும் நடுத்தர மக்களிடமிருந்து மோடியின் நண்பர்களின் கஜானாவுக்கு செல்வத்தை உறிஞ்சும் மற்றொரு உதாரணம் என்று அவர் மேலும் கூறினார்.

இருப்பினும், ஏலம் மூலம் கண்டறியப்பட்ட ₹6.075/ kWh கட்டணம், மின் உற்பத்தி உள்ளீடுகளில் சமீபத்திய செலவு அதிகரிப்புகளை கருத்தில் கொண்டு மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தது என்று வட்டாரங்கள் தெரிவித்தன. மத்தியப் பிரதேசத்தில் சமீபத்திய 3,200 மெகாவாட் ஏலத்தில் ₹4.222 முதல் ₹4.298/



kWh வரை அதிக நிலையான கட்டணங்கள் கண்டறியப்பட்டன (பகல்பூர் திட்டத்திற்கான ₹4.165 நிலையான கட்டணங்களுடன் ஒப்பிடுகையில்).

பீகார் கட்டணம் ஒப்பிடக்கூடிய திட்டங்களில் மிகக் குறைந்த ஒன்றாகும் என்று வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. இத்திட்டம், முதலில் 2012 இல் பீகார் மாநில மின் உற்பத்தி நிறுவனம் லிமிடெட் (BSPGCL) ஆல் கருத்தரிக்கப்பட்டது, பல தோல்வியுற்ற முயற்சிகளுக்குப் பிறகு, 2024 இல் மீண்டும் தொடங்கப்பட்டது.



பத்து ஆண்டுகளுக்கு முன்பு கையகப்படுத்தப்பட்ட திட்டத்திற்கான நிலம், முழுமையாக மாநிலத்திற்கு சொந்தமானது என்றும், பீகார் தொழில்துறை முதலீட்டு மேம்பாட்டு கொள்கை 2025 இன் கீழ் ஒரு பெயரளவிலான வாடகைக்கு டெவலப்பருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரி-வித்தனர். திட்டம் முடிந்ததும் நிலம் மீண்டும் அரசுக்குத் திரும்பிவிடும்.

அதானி பவருக்கு எந்த சிறப்பு சலுகைகளும் வழங்கப்படவில்லை என்றும், பீகாருக்கு நம்பகமான மின்சாரத்தை வழங்குவதற்காக ஆலையை மேம்படுத்துவதற்கும், இயக்குவதற்கும் அது பொறுப்பு என்றும் அதிகாரிகள் கூறினர். இந்த திட்டம் பிராந்தியத்தில் தொழில்துறை வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 50 ஆண்டுகளில் பீகாரில் குறிப்பிடத்தக்க தனியார் முதலீடுகள் குறைவாகவே உள்ளன. பிற மாநிலங்கள் விரைவான தொழில்துறை வளர்ச்சியை அனுபவித்தாலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் புதிய பெரிய தொழில்துறை திட்டங்கள் எதுவும் அங்கு இல்லை.

போதுமான மின்சார வசதி இல்லாததும், வளர்ச்சியடையாத உள்கட்டமைப்பும் தனியார் நிறுவனங்கள் மாநிலத்தில் தொழில் தொடங்குவதற்கு தடையாக அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன. இது வேலைவாய்ப்புகளை கட்டுப்படுத்தி, உள்ளூர்வாசிகளை வேலை தேடி மற்ற மாநிலங்களுக்கு குடியேற கட்டாயப்படுத்துகிறது. மேலும் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், தனிநபர் மின்சார நுகர்வுக்கும் இடையே ஒரு தெளிவான தொடர்பு உள்ளது. இது பொருளாதார வளர்ச்சியை உந்துவதில் நம்பகமான மின்சாரத்தின் பங்கை எடுத்துக்காட்டுகிறது.

உள்கட்டமைப்பு துறையில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு ₹1 கோடிக்கும், திறமையற்ற, பகுதி திறமையான மற்றும் திறமையான தொழிலாளர்கள் உட்பட குறைந்தது 70 வர்த்தகங்களில் சுமார் 200-250 மனித-ஆண்டு வேலைவாய்ப்புகள் உருவாகின்றன என்று வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு நிபுணர் வி. சுரேஷ் கூறுகிறார்.

இந்த கணக்கீட்டின் அடிப்படையில், 2023 பட்ஜெட்டில் ₹10 லட்சம் கோடி மூலதனச் செலவு ஒதுக்கீடு கணிசமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலான பொருளாதாரத் துறைகளின் வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு மற்றும் கட்டிட கட்டுமானம் மிக முக்கியம் என்று நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 10% ஆக உள்ள 13.5 கோடி மக்கள்தொகையுடன், பீகாரில் இருந்து மற்ற மாநிலங்களுக்கு குறைந்த ஊதிய வேலைகளுக்காக தொழிலாளர்கள் பெருமளவில் குடியேறி வருகின்றனர். அதன் தொழிலாளர்களில் 5.7% மட்டுமே உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர், அதே நேரத்தில் கிட்டத்தட்ட பாதி, அதாவது 49.6%, விவசாயம், வனவியல் மற்றும் மீன்பிடித்தலை வாழ்வாதாரத்திற்காக நம்பியுள்ளனர்.

உத்தரப்பிரதேசத்துடன் சேர்ந்து, பீகார் நாட்டின் மிகப்பெரிய தொழிலாளர் விநியோகாளர்களில் ஒன்றாகும், இது தேசிய தொழிலாளர் படைக்கு சுமார் 34 மில்லியன் தொழிலாளர்களை பங்களிக்கிறது. இந்த போக்கை மாற்றியமைக்க உள்கட்டமைப்பில் புதிய முதலீடு மிக முக்கியம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதானி குழுமம், 2,400 மெகாவாட் பகல்பூர் (பீர் பைன்டி) மின் திட்டத்தில் சுமார் ₹30,000 கோடி முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது. இது தொழில்துறை செயல்பாடுகளை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மின்சாரம், சிமெண்ட் (₹1,600 கோடி முதலீடு), தளவாடங்கள் மற்றும் விமான நிலைய செயல்பாடுகளில் குழுமத்தின் தற்போதைய இருப்பு, மாநிலத்தில் பெரிய அளவிலான வளர்ச்சிக்கு பங்களிக்க உதவுகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

# தமிழக அரசு ஊழியர்கள் தெரிந்து கொள்ளுங்கள்






புற்றுநோய், காசநோய் சிகிச்சைக்கு 18 மாதங்கள் வரை சிறப்பு விடுமுறை - தமிழக அரசின் புதிய சலுகைகள்.

அரசு ஊழியர்களுக்கான மருத்துவ விடுப்பில் புதிய சகாப்தம்

அரசு ஊழியர்கள் பலரும் தங்கள் பணியின்போது திடீரென கடுமையான நோய்களால் பாதிக்கப்படும்போது, விடுப்பு கிடைக்குமா, சம்பளம் கிடைக்குமா என்ற கவலையில் உழல்வது உண்டு. ஆனால், இப்போது தமிழக அரசு ஊழியர்களுக்குப் புற்றுநோய், காசநோய் (Tuberculosis) மற்றும் தொழுநோய் போன்ற தீவிர நோய்களுக்கான சிகிச்சைக்கு உதவும் வகையில், விடுமுறைச் சலுகைகளைத் தளர்த்தி, ஒரு முக்கிய அரசாணையை வெளியிட்டுள்ளது.

**அரசு ஊழியர்களுக்கு இது ஏன் முக்கியம்?**

ஒருவருக்குத் தீவிர நோய் வரும்போது, சிகிச்சைக்காக வேலையை விட்டு விலக வேண்டிய அவசியமோ அல்லது குறைந்த சம்பளத்துடன் போராட வேண்டிய நிலையோ இருக்கக் கூடாது என்பதற்காகவே அரசு இந்தச் சலுகைகளை வழங்குகிறது. இது, அரசு ஊழியர்களுக்கு வேலைப் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

**புற்றுநோய் சிகிச்சைக்கு பிரத்யேகச் சலுகை**

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கு அரசு ஏற்கனவே சலுகைகள் வழங்கினாலும், இப்போது கூடுதல் விடுமுறைக்கான விதிகள் மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

கீமோதெரபி அல்லது ரேடியோதெரபி சிகிச்சைக்கு ஆரம்பம் முதல் இறுதி வரை 10 நாட்கள் விடுமுறை அளிக்கப்படும்.

இந்த அடிப்படை விடுப்புக்குப் பிறகும், ஊழியருக்கு மேலும் சிகிச்சை தேவைப்பட்டால், அவர் அதற்கான மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பிப்பதன் மூலம் கூடுதல் சாதாரண விடுப்பு எடுத்துக்கொள்ளலாம்.

இந்த முடிவை, பொதுத்துறை செயலாளர் திருமதி. ஸ்வர்ணா அவர்கள் வெளியிட்ட அரசு உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சலுகை ஊழியர்கள் மன அமைதியுடன் முழுமையாகக் குணம் அடைய உதவுகிறது.

**காசநோய், தொழுநோய் மற்றும் பிற சிகிச்சைகளுக்கான நீண்ட விடுமுறைகள்**

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் 'கூடுதல் அசாதாரண விடுப்பு' (Extra-Ordinary Leave) சலுகைகள்தான் இந்த அரசாணையின் முக்கிய மையம். பொதுவாக, சாதாரண விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்புகள் முடிந்த பிறகு, இந்த அசாதாரண விடுப்பு வழங்கப்படும். இந்த விடுப்புக் காலத்திற்குச் சம்பளம் கிடைக்காது என்றாலும், ஊழியரின் பணிப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

**பதினெட்டு மாதங்கள் வரை விடுப்பு - யாருக்கு?**

சில தீவிர நோய்களுக்காகச் சிகிச்சை பெறும் ஊழியர்களுக்கு அரசு 18 மாதங்கள் (ஒன்றரை ஆண்டுகள்) வரை அசாதாரண விடுப்பு எடுக்க அனுமதிக்கிறது. இந்தச் சலுகை பின்வரும் நோய்களால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்குக் கிடைக்கும்:

**நுரையீரல் காசநோய் , தொழுநோய், புற்றுநோய்.**

**முக்கிய நிபந்தனைகள்:**

இந்தச் சலுகையைப் பெற ஊழியர் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் (காசநோய் நிபுணர்) அல்லது மருத்துவமனையிடமிருந்து தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதற்கான சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

- குறைந்தபட்ச சேவை தேவை: பொதுவாக, இந்த நீண்ட காலச் சலுகை, ஒரு வருடத்திற்கும் மேலாகத் தொடர்ச்சியாக அரசுப் பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.
- வீட்டில் சிகிச்சை: நுரையீரல் காசநோய்க்கு, அரசு அங்கீகரித்த காசநோய் நிபுணரின் மேற்பார்வையில் வீட்டில் இருந்தே சிகிச்சை பெற்றாலும், 18 மாதங்கள் வரையிலான விடுப்புச் சலுகை உண்டு.

**கல்விக்காக 2 ஆண்டுகள் விடுப்பு:**

பொது நலனுக்குப் பயன்படும் வகையில், ஊழியர்கள் சான்றளிக்கப்பட்ட படிப்புகளை மேற்கொள்வதற்காகத் தேவைப்பட்டால், அவர்களுக்கு 24 மாதங்கள் (இரண்டு ஆண்டுகள்) வரை கூட அசாதாரண விடுப்பு வழங்கப்படலாம்.

**பணிப் பாதுகாப்பு உறுதி**

நிரந்தரமில்லாத ஊழியர்களுக்குப் பாதுகாப்பு: நிரந்தரப் பணியாளராக இல்லாத ஊழியர்களுக்குக் கூட, அவர்களின் தொடர்ச்சியான சேவையைப் பொறுத்து, இந்தச் சலுகைகள் பொருந்தும். ஓய்வு பெற்ற நாட்களை மாற்றலாம்: விடுப்பு வழங்க அதிகாரம் பெற்ற அதிகாரி, சில விதிவிலக்கான சூழ்நிலைகளில், விடுப்பு எடுக்காத சில விடுமுறை நாட்களைப் பின்னோக்கிப் பார்த்து, அதை அசாதாரண விடுப்பாக மாற்றவும் அதிகாரம் உண்டு.

சுருங்கச் சொன்னால், இந்த அரசாணைகள் அரசு ஊழியர்களின் ஆரோக்கியம் மற்றும் பணியிட உரிமைகள் மீது தமிழக அரசுக்கு உள்ள அக்கறையைத் தெளிவாகக் காட்டுகிறது. ஊழியர்கள் நோய்களால் பாதிக்கப்படும்போது, நிதி மற்றும் பணிப் பாதுகாப்பு குறித்த கவலை-யின்றி முழுமையாகச் சிகிச்சை பெற இது ஒரு மகத்தான வாய்ப்பாகும்.

# பாகிஸ்தானில் ராணுவ புரட்சி?
# அசிம் முனீருக்கு குவியும் அதிகாரம்!
# தூக்கி எறியப்படும் மக்களாட்சி?

பாகிஸ்தானில் சத்தமே இல்லாமல் ஏகப்பட்ட அரசியல் மாற்றங்கள் நடந்து வருகிறது இதற்கிடையே அங்கு பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஃபீல்ட் மார்ஷல் அசிம் முனீருக்கு கூடுதல் அதிகாரம் குவியவுள்ளது மேலும் இதன் மூலம் பாகிஸ்தானில் மீண்டும் மக்களாட்சி நீக்கப்பட்டு ராணுவ ஆட்சி அமையும் ஆபத்தான சூழல் உருவாகியிருக்கிறது.

ஏனெனில் பாகிஸ்தானில் ராணுவத்தின் ஆதிக்கம் எப்போதும் அதிகமாகவே இருக்கும் கடந்த காலங்களில் அங்கு பல முறை மக்கள் ஆட்சி வீழ்த்தப்பட்டுள்ளது. இதனால் அங்கு ராணுவத்தில் நடக்கும் சிறு விஷயங்களும் பெரும் கவனத்தை பெறும் அந்த வகையில் அங்குக் கடந்த 2022 முதல் ராணுவ தளபதியாக இருப்பவர் அசிம் முனீர் அவருக்கு சமீபத்தில் தான் ஃபீல்ட் மார்ஷலாக பதவி உயர்வு தரப்பட்டது.

மேலும் கூடுதல் அதிகாரம் வரவிருக்கிறது இதற்காக ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் அரசு தனது அரசியலமைப்பில் திருத்தங்களைச் செய்யத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் ராணுவத்திற்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படலாம் எனத்தெரிகிறது.

ஏனெனில் கடந்த சில நாட்களாகவே இது தொடர்பான தகவல் வெளியாகி வந்த நிலையில் இதை பாகிஸ்தான் அரசு இப்போது உறுதி செய்துள்ளது மேலும் 27வது அரசியலமைப்பு திருத்தத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவித்தனர். மேலும் ஆயுதப்படைகளின் கட்டமைப்பு தொடர்பான மாற்றங்கள் இதில் இருக்கும் என தெரிகிறது.



பாகிஸ்தான் துணைப் பிரதமரும் வெளியுறவுத்துறை அமைச்சருமான இஷாக் டார் அந்நாட்டின் நாடாளுமன்றத்திலேயே இதை உறுதி செய்தார். இந்த நடவடிக்கை, அசிம் முனீரின் ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்தும் என்றே பலரும் நினைக்கிறார்கள்.

மேலும் இது பாகிஸ்தானுக்கு சிக்கலையே கொடுக்கும் ஏனென்றால் பாகிஸ்தானில் கடந்த காலங்களில் பலமுறை ராணுவ ஆட்சி அமைந்துள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் கவிழ்க்கப்பட்டு ராணுவ தலைமை ஆட்சிக்கு வருவது அங்கு பலமுறை நடந்துள்ளது. ஆனால் 2008க்கு பிறகு அங்கு தேர்தல் மூலமாகவே அரசுகள் அமைந்தாலும் கூட இன்னுமே ராணுவத்திற்கு அங்கு கணிசமான அளவு செல்வாக்கு இருக்கவே செய்கிறது. அப்படியிருக்கும்போது ராணுவத்திற்கு கூடுதல் அதிகாரம் என்பது எச்சரிக்கை மணியை அடிப்பதாகவே இருக்கிறது.

மேலும் இந்த சட்ட திருத்தத்தில் என்ன மாதிரியான மாற்றங்கள் வரும் என்பது குறித்த தகவல்களும் இப்போது வெளியாகியுள்ளது. இந்த 27வது திருத்தத்தின் மூலம் ராணுவத் தளபதி மற்றும் ஆயுதப் படைகளை நிர்வகிக்கும் அரசியலமைப்பின் 243வது பிரிவில் திருத்தங்கள் செய்யப்படுகிறது. மேலும், அரசியலமைப்பு நீதிமன்றங்களை அமைப்பது, தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் செயல்முறையை எளிதாக்குவது, நிர்வாக மாஜிஸ்திரேட்டுகளை நியமிப்பது மற்றும் நீதிபதிகளின் இடமாற்றம் போன்ற விஷயங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் எனகூறப்படுகிறது.

மேலும், இயற்கை வளங்களை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதில் மத்திய அரசுக்கு கூடுதல் அதிகாரத்தை கொடுக்கிறது மாகாணங்களின் பங்கை குறைக்கிறது. மேலும், கல்வி மற்றும் மக்கள் நலத்துறை அமைச்சகங்களின் கட்டுப்பாட்டை மாகாணங்களிடமிருந்து மத்திய அரசுக்கு மாற்றவும் வழிவகை செய்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் ராணுவத்திற்கும் மத்திய அரசுக்கும் அதிகாரத்தை குவிப்பதாக இந்த மாற்றங்கள் இருக்கிறது.

அசிம் முனீர் ஆபரேஷன் சிந்தூருக்கு பிறகு நடந்த மோதலில் இந்தியாவிடம் பாகிஸ்தான் படுதோல்வி அடைந்து சரணடைந்தது அனைவருக்கும் தெரியும் ஆனாலும், அசிம் முனீருக்கு பதவி உயர்வு தரப்பட்டதுடன் ராணுவத்தைத் தாண்டி அரசு நடைமுறைகளிலும் தொடர்ச்சியாகத் தலையிட்டு வருவதாகவே தெரிகிறது. சமீபத்தில் பாகிஸ்தான் பிரதமர் அமெரிக்கா சென்றபோதும் முனீர் உடன் சென்றார் அமெரிக்க அதிபர் டிரம்ப்பையும் சந்தித்து ஆலோசனை நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கபடி கார்த்திகாவிற்கு வாழ்த்துக்கள்!

## முதல் முறையாக சர்வதேச கபடி: தங்கப் பதக்கத்துடன் திரும்பிய கண்ணகி நகர் கார்த்திகா

சென்னை, கண்ணகி நகர் பகுதியில் இருந்து இந்திய மகளிர் கபடி அணியில் விளையாடிய கார்த்திகா என்ற பெண் சிறப்பாக விளையாடி தங்கம் வென்றுள்ளார்.




ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகள் 2025-இல் இந்தியாவின் இளையோர் மகளிர் கபடி அணி, இறுதிப் போட்டியில் ஈரானை 75-21 என்ற புள்ளிக் கணக்கில் அபாரமாக வீழ்த்தி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக சென்ற இந்த போட்டியில், முழு ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி, இத்தொடரில் ஒரு போட்டியில் கூட தோற்காமல், வெற்றியை பெற்று பதக்கத்தை வென்றுள்ளது.

இந்த வெற்றியானது ஒட்டுமொத்த அணியின் கூட்டு முயற்சி என்றாலும், பல வீரர்கள் இத்தொடர் முழுவதும் தனித்துத் தெரிந்தனர். அந்த வரிசையில், சென்னை கண்ணகி நகர் பகுதியில் இருந்து இந்திய மகளிர் கபடி அணியில் விளையாடிய கார்த்திகா என்ற பெண் சிறப்பாக விளையாடி தங்கம் வென்றுள்ளார்.

இதுதான் நான் விளையாடி வாங்கிய முதல் மெடல். இந்தியாவுக்காக விளையாட வேண்டும் என்பது எனது கனவு. கண்ணகி நகரில் இருந்து மெடல் வாங்கி இருப்பதால் ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது என்று கூறியுள்ளார்.




# பனை விதைகளை பாதுகாப்பது எப்படி?

பனை விதைகளைப் பாதுகாக்க, பனம்பழங்கள் பழுத்தவுடன் விதைகளை உடனே சேகரித்து, அதிகப்படியான வெயில் படாமல், ஈரப்பதம் உள்ள சூழலில் சேமிக்க வேண்டும். மேலும், சேகரிக்கும் விதைகளை உடனடியாக நட்டு வளர்ப்பது சிறந்தது. விதைகள் முளைப்பதற்குத் தேவையான ஈரப்பதம், போதுமான வெப்பம் மற்றும் நோய் மற்றும் பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாத்து வைப்பது முக்கியமானதாகும்.

**விதைகளைத் தேர்ந்தெடுத்தல்:**

நல்ல ஆரோக்கியமான, பூச்சி தாக்குதல் இல்லாத, அதிக விளைச்சல் தரும் தாய் பனை மரங்களில் இருந்து விதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பனம்பழங்கள் பழுத்த பிறகு, அதிலிருந்து விதைகளை பிரித்தெடுக்க எடுக்க வேண்டும்.

பெரும்பாலான பனம் பழங்களில் மூன்று விதைகள் கிடைக்கும்.

**சேமித்தல்:**

விதைகளை சேகரித்த பிறகு, அவை உலர்வதற்கு முன்பு உடனே விதைக்க வேண்டும்.

மழை இல்லாத காலங்களில், விதைகளை ஒரு வாரத்திற்கு மிகாமல் வெயிலில் வைக்கலாம்.

பனை விதைகளை குவியலாக சேர்த்து வைக்க கூடாது. நல்ல காற்றோட்டமான சாக்குகளில் பனை விதைகளை கட்டி விதைக்கும் இடங்களுக்கு எடுத்துச் செல்லலாம்.

**முளைக்க வைப்பதற்கான சூழல்:**

விதைகள் முளைப்பதற்குத் தேவையான ஈரப்பதம், சரியான வெப்பம் மற்றும் பூச்சிகள் மற்றும் நோய் தாக்குதல் இல்லாத சூழலை உறுதி செய்ய வேண்டும்.

**நடவு முறை:**

சேகரித்த பனை விதைகளை 22 நாட்களுக்கு மிகாமல் உடனடியாக நட்டு வளர்ப்பது சிறந்தது, மண் வெட்டியில் ஒரு கொட்டு மண் எடுத்தால் போதுமானது. ஆழமான குழி தேவையில்லை. விதை மண்ணில் மூடும் அளவிற்கு குழி இருந்தால் போதுமானது. 5 அடிக்கு ஒரு பனை விதைகளை நடவு செய்வது சிறந்தது. இதனால் அனைத்து பனை விதைகளும் வீணாகாமல் பனை மரங்கள் வளரும்.

**என்றும் அன்புடன்**

**பூரணங்குப்பம் - பனை ஆனந்தன்**

# அறிந்து கொள்ள வேண்டிய மருத்துவ தகவல்



நீரிழிவு நோய் என்பது ஒரு கடுமையான உடல்நலப் பிரச்சினையாகும். இதை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் முக்கியம். இரத்த சர்க்கரை அளவு அதிகரிப்பது பல கடுமையான நோய்களை ஏற்படுத்தும். இருப்பினும்,



வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் சரியான உணவு முறை மூலம் இதைக் கட்டுப்படுத்தலாம். ஆயுர்வேதத்தில் இரத்த சர்க்கரையை கட்டுப்படுத்த உதவும் பல மூலிகைகள் மற்றும் மசாலாப் பொருட்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் பிரியாணி இலையும் ஒன்றாகும்.

உணவின் சுவையை அதிகரிக்க பொதுவாகப் பயன்படுத்தப்படும் பிரிஞ்சி இலை எனப்படும் பிரியாணி இலை, இரத்த சர்க்கரையை கட்டுப்படுத்த உதவும் மருத்துவ குணங்கள் நிறைந்தது. காலையில் வெறும் வயிற்றில் பிரியாணி இலை தேநீர் குடிப்பது நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நன்மை பயக்கும். பிரியாணி இலை தேநீரின் ஆரோக்கிய நன்மைகளை பற்றி இங்கே காணலாம்.

### பிரியாணி இலை தேநீரின் நன்மைகள்

**Blood Sugar Level: இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும்**

பிரியாணி இலைகளில் ஆண்டிஆக்சிடெண்ட் மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகள் காணப்படுகின்றன. இந்த பண்புகள் இன்சுலின் உணர்திறனை மேம்படுத்த உதவுகின்றன. இதன் மூலம் உடலில் இரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்கின்றன. வெறும் வயிற்றில் இந்த தேநீர் குடிப்பது அதை இன்னும் திறம்பட வேலை செய்ய வைக்கிறது.

**Digestion: செரிமானம் சீராகும்**

பிரியாணி இலைகளில் உள்ள தனிமங்கள் செரிமான நொதிகளை செயல்படுத்துகின்றன. இது உணவை எளிதில் ஜீரணிக்க உதவுகிறது. நீரிழிவு நோயாளிகளில் செரிமானம் தொடர்பான பிரச்சினைகள் பெரும்பாலும் காணப்படுகின்றன. இதுபோன்ற சூழ்நிலையில், பிரியாணி இலை தேநீர் மலச்சிக்கல், அமிலத்தன்மை மற்றும் வாய்வு போன்ற பிரச்சினைகளிலிருந்து நிவாரணம் அளிக்கும்.

**Heart Health: இதய ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும்**

பிரியாணி இலைகளில் பொட்டாசியம் மற்றும் ஆண்டிஆக்சிடெண்டுகள் நிறைந்துள்ளன. அவை இதய ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும். இது இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், கெட்ட கொழுப்பின் அளவைக் குறைக்கவும் உதவுகிறது. இதனால் இதய நோய்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது.

**Weight Loss: எடை இழப்புக்கு உதவுகிறது**

பிரியாணி இலை தேநீர் வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்க உதவுகிறது. இது கலோரிகளை வேகமாக எரிக்கிறது. இது பசியைக் கட்டுப்படுத்துவதிலும் பயனுள்ளதாக இருக்கும். ஆகையால், இது எடை இழப்பு செயல்முறையை எளிதாக்குகிறது. நீரிழிவு நோயாளிகள் ஆரோக்கியமான எடையை பராமரிப்பது மிகவும் முக்கியம்.

**Immunity: நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது**

வைட்டமின் சி, வைட்டமின் ஏ மற்றும் பிற ஆண்டிஆக்சிடெண்டுகள் பிரியாணி இலைகளில் உள்ளன. அவை உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்துகின்றன. இது உடல் தொற்றுநோய்களை எதிர்த்துப் போராட உதவுகிறது, நோய்களிலிருந்து பாதுகாக்கிறது.

**Mental Tension: மன அழுத்தத்தைக் குறைக்க உதவும்**

பிரியாணி இலைகள் மன அழுத்தத்தையும் பதட்டத்தையும் குறைக்க உதவும் அமைதியான பண்புகளைக் கொண்டுள்ளன. நீரிழிவு நோயாளிகள் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியம், ஏனெனில் மன அழுத்தம் இரத்த சர்க்கரை அளவை அதிகரிக்கும்.

### பிரியாணி இலை தேநீர் தயாரிப்பது எப்படி

வீட்டிலேயே பிரியாணி இலை தேநீர் தயாரிப்பது மிகவும் எளிது. இதற்கு, 1-3 பிரியாணி இலைகளை எடுத்து ஒரு கப் தண்ணீரில் கொதிக்க வைக்கவும். 6 முதல் 7 நிமிடங்கள் கொதித்த பிறகு, அதை வடிகட்டி, வெறும் வயிற்றில் வெதுவெதுப்பான சூட்டில் குடிக்கவும். நீங்கள் விரும்பினால், அதில் சிறிது எலுமிச்சை சாற்றையும் சேர்க்கலாம்.

# இந்தியாவில் மிகப்பெரிய தங்கத்தளம் கண்டுபிடிப்பு! எதிர்கால செல்வந்தர் ஆகும் மாநிலம்!

பீகாரின் பல பகுதிகளில் ஆய்வுகள் நடந்து வருகின்றன பழைய சோனம் தளம் பகுதிகள் மற்றும் சுரங்கங்கள் மூலம் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உள்ளே இருக்கும் தங்கத்தின் அளவு மதிப்பீடு செய்யப்படுகிறது. இதன் மூலம் மட்டுமல்ல, நாட்டின் தங்க வர்த்தக நிலையும், விலை மாறுதல்களும் பாதிக்கப்படலாம்.

இந்திய அரசின் வல்லுநர்கள் இதை முக்கியமான கண்டுபிடிப்பாகக் கருதுகின்றனர். மேலும் இந்தியாவின் இந்த தங்கத்தளங்கள் கண்டுபிடிப்பு, வருமானத்தை மட்டுமல்ல, தொழிற்சாலைகள் மற்றும் நவீனம் மேம்பாட்டுக்கும் வழிகாட்டும் மேலும் முதலீட்டாளர்கள் மற்றும் பொருளாதார ஆர்வலர்கள் இதனை கவனித்து வருகின்றனர். ஆகையால் பீகாரின் செல்வ நிலை இந்தியா முழுவதும் உயர்வடைய வாய்ப்பு உள்ளது.



எனவே மொத்தமாக பீகாரின் நிலம், வரலாறு மற்றும் வளங்கள் இந்தியாவின் பொருளாதார கட்டமைப்பில் முக்கிய பங்கு வகிக்கக்கூடும். ஆகையால் எதிர்காலத்தில் பீகார் இந்தியாவின் செல்வந்த மாநிலங்களில் ஒன்றாக மாறக்கூடும் என நிபுணர்கள் முன்கூட்டியே கணிக்கிறார்கள்.

# உலகின் முதல் AI அமைச்சர்

ஊழலை ஒழிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, உலகின் முதல் ஏஐ அமைச்சரை நியமித்து சாதனை படைத்திருக்கிறது அல்பேனியா நாடு அரசு.

இந்த ஏஐ அமைச்சரின் பெயர் டியல்லா (Diella), அதாவது அல்பேனிய மொழியில் 'சூரியன்' என்று பொருள்.

இந்த அமைச்சர், ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது என்று அல்பேனிய பிரதமர் எடி ராமா (Edi Rama) அறிவித்திருக்கிறார்.



# ஆடிப்போன ஸ்டாலின்!

## கனவை தவிடு பொடியாக்கிய பீகார் வெற்றி..!

பீகார் தேர்தல் வெற்றியின் அரசியல் அதிர்வு வடஇந்தியத்தில் மட்டுமல்ல, தென்னிந்திய அரசியல் தளத்திலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, தேசிய அளவில் தனது பிடிப்பை விரிவுபடுத்த வேண்டும் என்ற கனவில் இருந்த தமிழக முதல்வர் ஸ்டாலினின் திட்டங்களுக்கு இந்த வெற்றி நேரடி சவாலாக மாறிவிட்டது. கூட்டணித் தரப்பில் ஏற்பட்ட மாற்றங்கள், மக்களின் எதிர்பார்ப்பு, தேசிய அரசியல் ஓட்டம். இவை அனைத்தும் இணைந்து பீகாரில் ஒரு புதிய அரசியல் சூழலை உருவாக்கியிருக்கின்றன. இதன் தாக்கம் தமிழக அரசியலிலும் தீவிரமாக பேசியப்படுகிறது.

திமுக கடந்த சில ஆண்டுகளில் தேசிய தரப்பில் தனது செல்வாக்கை உயர்த்த பல முயற்சிகள் செய்தது. சமூக நீதி, கூட்டணி ஒருமைப்பாடு, பொதுவிதானங்கள் என்பனவற்றை முன்வைத்து வடக்கு மாநிலங்களில் தங்கள் சிந்தனையை பரப்ப நினைத்தது. ஆனால் பீகாரின் புதிய முடிவு மக்களின் முன்னுரிமையில் உள்ளூர் வளர்ச்சி, பாதுகாப்பு, வேலைவாய்ப்பு போன்ற கோரிக்கைகள் மிகப் பெரிதாகிப் போனதை வெளிப்படையாக காட்டுகிறது.

இதன் பின்னணியில், தமிழ் மாநிலத்தில் திமுக முன்வைக்கும் சில தேசிய-நிலை அரசியல் திட்டங்கள் இனி எளிதாக மக்கள் மனதில் பிடிபடாது என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

தமிழகத்திலும் வளம், வேலைவாய்ப்பு, விலையேற்ற கட்டுப்பாடு, பாதுகாப்பு ஆகியவை மீண்டும் முக்கிய



விவாதங்களாக மாற ஆரம்பித்துள்ள சூழலில், பீகார் முடிவு அரசியல் நெளிவை பாதிக்கும் வகையில் திகழ்கிறது. மக்கள் விரும்புவது நடைமுறை மாற்றங்களா, அல்லது பெரிய அளவிலான தேசிய அரசியல் இயக்கங்களா என்ற கேள்வியை இந்த வெற்றி வலுவாக எழுப்பியுள்ளது. இதனால், திமுகவின் எதிர்கால அரசியல் திட்டங்களும், ஸ்டாலின் கனவுகளும் புதிய சவால்களை எதிர்நோக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

இந்த மாற்றத்தினால் தமிழகத்தில் அரசியல் சமன்பாடுகள் புதிதாக அமைக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. அரசு ஏற்றுக்கொள்ளும் திட்டங்களும், மக்களிடம் செல்லும் கொள்கைகளும் இனி மிகவும் கணக்கிட்டு வடிவமைக்கப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்பது இன்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படும் முக்கிய கருத்தாகும்.


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, (Opp to Perumal Temple) Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 87545 82123
Email: info@penakural.com, Web: www.penakural.com

# தமிழகத்தில் தங்க நகைக்கடைகள் வேகமாக வளர்ந்ததன் ரகசியம்

# வணிக மாற்றங்கள்? மத்திய அரசின் விதிகளா?

தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் பெரிய தங்க நகைக்கடைகள் பல ஊர்களில் வேகமாக கிளைகள் திறந்து விரிவடைந்துள்ளன. இதற்கு பின்னால் பல பொருளாதார மற்றும் சட்டரீதியான காரணங்கள் உள்ளன முன்னர், பெரிய நகைக்கடைகள் சில நகரங்களிலேயே இயங்கிய நிலையில், கடந்த பத்தாண்டுகளில் அவை ஊர் ஊராக கிளைகள் தொடங்கியுள்ளன. இதற்குக் காரணமாக தங்க நகைத் துறை “ஒழுங்கமைக்கப்பட்ட துறை” (Organised Sector) நோக்கி மாறியது முக்கியப் பங்கு வகிக்கிறது.

மேலும் ஒன்றிய அரசு கட்டாய ஹால்மார்க்கிங் விதியை அறிமுகப்படுத்தியது தங்கத்தின் தரத்தில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தி, பெரிய நகைக்கடைகளின் நம்பகத்தன்மையை உயர்த்தியது. அதோடு, ஜி.எஸ்.டி மற்றும் பணமதிப்பிழப்பு (Demonetisation) போன்ற சீர்திருத்தங்கள், சட்டப்படி செயல்படும் பெரிய நிறுவனங்களுக்கு ஆதரவாக இருந்தன.

மேலும் முறைப்படுத்தப்பட்ட கணக்கியல் மற்றும் வெளிப்படையான வணிக முறைகளால், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடம் இருந்து குறைந்த வட்டியில் கடன் பெறும் வாய்ப்பு கிடைத்தது. இதனால் ஒரே நேரத்தில் பல ஊர்களில் புதிய கிளைகளைத் தொடங்க முடிந்தது.

மேலும், சில நிறுவனங்கள் பங்குச் சந்தையில் நுழைந்து முதலீட்டை அதிகரித்தன. மத்திய



தர வர்க்க மக்களின் வருமான உயர்வு, தங்க முதலீட்டில் ஆர்வம், மற்றும் 2K தலைமுறையின் நவீன நகை தேவைகள் ஆகியவை தங்க நகை சந்தையை வேகமாக வளரச் செய்தன.

மேலும் பெரிய நகைக்கடைகள் மையப்படுத்தப்பட்ட உற்பத்தி மற்றும் ஒரே மாதிரியான வடிவமைப்புகள் மூலம் உற்பத்தி செலவை குறைத்து, வாடிக்கையாளர்களுக்குச் சீரான தரத்தை வழங்குகின்றன. இதற்கிடையில், தேசிய அளவிலான விளம்பரங்கள் மற்றும் பிராண்டிங், புதிய கிளைகளுக்கும் எளிதில் புகழ் பெற்றுத் தருகின்றன. மொத்தத்தில், ஒன்றிய அரசின் ஹால்மார்க் மற்றும் ஜி.எஸ்.டி சீர்திருத்தங்கள், வங்கிகளின் தாராள கடனுதவி, மற்றும் மக்களின் வருமான உயர்வு ஆகியவை கடந்த சில ஆண்டுகளில் தங்க நகைக்கடைகள் வேகமாக வளர்ந்ததற்குக் காரணமாக அமைந்துள்ளன.

# தமிழக ஆம்னி பஸ்களுக்கு ரூ.70 லட்சம் அபராதம்; கேரள அரசு அதிகாரிகள்



கேரளாவில் சிக்கியுள்ளன. போக்குவரத்து விதிகளை மீறியதாகக் கூறி, 30 ஆம்னி பேருந்துகளுக்கு ரூ.70 லட்சம் வரை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில், ஆம்னி பேருந்துகளுக்காக தனித்துவமான பெர்மிட் (permit) வழங்க வேண்டும் என ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில் சென்னையிலிருந்து மதுரைக்கு அரசு ஏசி- பேருந்தில் ரூ.570, சாதாரண பேருந்தில் ரூ.450 என நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துடன் இயங்குகின்றன. ஆனால் இதே தூரத்திற்கு, தீபாவளி அல்லது பொங்கல் நாட்களில், ஆம்னி பேருந்துகளில் டிக்கெட் விலை ரூ.2,000 வரை உயர்கிறது.

இதனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். சமீபத்தில் சபரிமலை சீசன் தொடங்கியதைத் தொடர்ந்து, தமிழக ஆம்னி பேருந்துகள் கேரளாவுக்குள் பெரிய அளவில் நுழைந்தன.

ஆனால் இவற்றில் பல பேருந்துகள் சட்டத்தை மீறி இருக்கைகளுக்கு தனிப்பட்ட டிக்கெட் வழங்கி பயணிகளை ஏற்றியதாகக் கண்டறிந்த கேரள போக்குவரத்துத் துறை, தலா ரூ.2 லட்சம் அபராதம் விதித்தது இதனால் அதிர்ச்சியடைந்த ஆம்னி பேருந்து உரிமையாளர்கள், இனி கேரளாவுக்கு சேவைகளை இயக்கமாட்டோம் என்று அறிவித்துள்ளனர்

மேலும் ஆம்னி பேருந்துகள் சட்டப்படி “ஒப்பந்த பேருந்து” வகைக்குள் வருகின்றன. அதாவது, முழுமையான குழுவை ஒரே ஒப்பந்தத்தின் அடிப்படையில் எடுத்துச் சென்று திரும்பக் கொண்டு வர அனுமதி உண்டு. ஆனால் வழித்தடத்தில் தனிப்பட்ட பயணிகளிடம் டிக்கெட் வசூலிப்பது விதிமீறலாகும்.

ஆனால் அரசு மற்றும் தனியார் பேருந்துகளுக்கு ஸ்டேஜ் பெர்மிட் வழங்கப்படுகின்றது; இது குறிப்பிட்ட வழித்தடங்களில் பயணிகளை ஏற்றி இறக்க அனுமதிக்கிறது. ஆனால் ஆம்னி பேருந்துகளுக்கு அத்தகைய அனுமதி இல்லை. இது பற்றி சமூக ஆர்வலர்கள், ஆம்னி பேருந்துகளுக்கு புதிய பெர்மிட் தேவையில்லை தற்போதைய ஒப்பந்த அனுமதிக்குள் சட்டப்படி இயங்கினால் போதும் எனக் கூறியுள்ளனர்.

இந்நிலையில், ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம், தங்களுக்கென தனி பெர்மிட் வழங்கப்பட்டால் பிரச்சனைகள் தவிர்க்கப்படலாம் என வலியுறுத்தி வருகிறது.




# இந்திய மகளிர் கிரிக்கெட்: ஒரு கனவு நனவான தருணம்!

**முதல் முறையாக உலகக் கோப்பை! ஹர்மன்பிரீத் சிங்கப் படையின் வரலாற்றுச் சாதனை!**

மும்பையின் டி.ஒய். பாட்டீல் ஸ்டேடியம் கண்ட அந்த இரவு, இந்திய விளையாட்டு வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு சரித்திரத் தருணம்! ஆம், ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய மகளிர் கிரிக்கெட் அணி, 2025 ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் உலகக் கோப்பையை வென்று, கோப்பையைத் தாயகத்திற்குக் கொண்டு வந்தபோது, பல ஆண்டுகாலக் கனவு ஒருசேர நிறைவேறியது. 1983-ல் கபில் தேவின் ஆதிக்கத்தைப் போல, இப்போது ஹர்மன்பிரீத் தலைமையிலான இந்த அணி, ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தை அறிவித்துள்ளது.

**இறுதிப் போட்டியின் உச்சங்கள்:**

தென்னாப்பிரிக்காவுடனான பரபரப்பான இறுதிப் போட்டியில், ஒரு இமாலய இலக்கை நிர்ணயித்து, பின்னர் தங்கள் உறுதியான பந்துவீச்சால் இந்திய வீராங்கனைகள் எதிரணியை வீழ்த்தினர்.

**உலகக் கோப்பை வெற்றிக்கு வித்திட்ட நட்சத்திரங்கள்:**

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 2025 உலகக் கோப்பையை வென்றதற்கு பின்னால், பின்வரும் முக்கிய வீராங்கனைகளின் சிறப்பான செயல்பாடுகள் இருந்தன:

- **ஷஃபாலி வர்மா**: இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகி விருதை வென்ற இவர், ஆக்ரோஷமாக 87 ரன்கள் குவித்து, அணிக்கு ஒரு வலுவான தொடக்கத்தையும் அடித்தளத்தையும் அமைத்தார்.
- **தீப்தி ஷர்மா:** தொடர் நாயகி விருதைப் பெற்ற ஆல்-ரவுண்டரான தீப்தி, இறுதிப் போட்டியில் பேட்டிங்கில் 58 ரன்களும், பந்துவீச்சில் 5 விக்கெட்டுகளும் (39 ரன்களுக்கு) எடுத்து இந்தியாவின் வெற்றிக்குக் கவசமாக நின்றார்.

• **ஸ்மிருதி மந்தனா:** துணை கேப்டன் மந்தனா இறுதிப் போட்டியில் 45 ரன்கள் எடுத்து நல்ல தொடக்கம் அளித்ததுடன், அரையிறுதியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அதிவேக சதம் அடித்து அணிக்கு உத்வேகம் அளித்தார்.

• **ஜெமிமா ரோட்ரிக்ஸ்**: அரையிறுதியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இவர் ஆட்டமிழக்காமல் அடித்த 127 ரன்கள், அணியைத் தோல்வியின் விளிம்பில் இருந்து மீட்டெடுத்து, அணியின் மன உறுதியை உயர்த்திய மகத்தான திருப்புமுனையாக அமைந்தது.

**கேப்டனின் நம்பிக்கை:** ஹர்மன்பிரீத் கவுர், முக்கியமான தருணங்களில் எடுத்த முடிவுகளும், நெருக்கடியைச் சமாளிக்கும் அவரது தலைமைப் பண்பும் அணியை வழிநடத்தியது.

இந்த வெற்றி வெறுமனே ஒரு கோப்பை அல்ல; இது 2005 மற்றும் 2017 இறுதிப் போட்டித் தோல்விகளின் வலிக்குக் கிடைத்த ஆறுதல். சொந்த மண்ணில் உலகக் கோப்பையை வென்றதன் மூலம், இந்திய மகளிர் அணி, ஆசிய கண்டத்தில் இருந்து இந்தச் சாதனையை நிகழ்த்திய முதல் அணியாகப் பெருமை சேர்த்துள்ளது.

**பெண்கள் கிரிக்கெட் அதிகாரமளித்தல்: ஒரு புரட்சியின் பின்னணி**

இந்த உலகக் கோப்பை வெற்றி, வெறும் விளையாட்டுச் சாதனை மட்டுமல்ல, இது இந்தியாவில் பெண்கள் கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கான ஒரு மகத்தான தருணம்.

**பெண்களுக்கு சம உரிமை மற்றும் அங்கீகாரம்:**

**ஊதிய சமத்துவம்** (Pay Parity): பி.சி.சி.ஐ. (BCCI) மகளிர் மற்றும் ஆடவர் கிரிக்கெட் வீரர்களுக்கு இடையே ஊதிய சமத்துவத்தைக் கொண்டு வந்த பிறகு, வீராங்கனைகள் அதிக ஊக்கத்தைப் பெற்றனர். இம்முறை உலகக் கோப்பை பரிசுத் தொகையையும் ஐ.சி.சி. பல மடங்கு அதிகரித்தது.

**ஐ.பி.எல். புரட்சி:** மகளிர் பிரீமியர் லீக் (WPL) தொடங்கப்பட்டதன் மூலம், இளம் வீராங்கனைகளுக்கு அதிக போட்டி மற்றும் வருமானம் ஈட்டும் வாய்ப்புகள் கிடைத்தன. இது, பல வீராங்கனைகளுக்கு கிரிக்கெட்டை ஒரு முழுநேரத் தொழிலாகக் கருதும் நம்பிக்கையை அளித்தது.

உள்ளூர் வளர்ச்சிகள்: தமிழகத்தில் கூட, ஒரு காலத்தில் 11 பேர் கொண்ட அணியைக் கண்டறியப் போராடிய நிலை மாறி, தற்போது மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கணக்கான பெண்கள் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க வருகின்றனர். தமிழ்நாடு பிரீமியர் லீக் (TNPL) பாணியில் மகளிர் லீக் தொடங்கத் திட்டமிடப்பட்டிருப்பது, இந்த வெற்றியின் உடனடி விளைவுகளில் ஒன்றாகும்.

**கிராமப்புறங்களில் இருந்து வந்த சாதனையாளர்கள்:**

இந்த வெற்றி பெற்ற அணியில் உள்ள வீராங்கனைகள், இந்தியாவின் வெவ்வேறு பகுதிகள், பல்வேறு சமூகப் பின்னணிகள் மற்றும் வெவ்வேறு சவால்களிலிருந்து வந்தவர்கள். அவர்கள் ஒரு பொதுவான இலக்குக்காகப் போராடி, வெற்றி பெற்றனர்.

“இந்த வெற்றி ஒட்டுமொத்த தேசத்திற்கும் பெருமை அளிக்கிறது. இந்தத் தொடர் முழுவதும் நீங்கள் காட்டிய விடாமுயற்சி, எதிர்காலச் சாம்பியன்களை விளையாட்டில் ஈடுபட ஊக்குவிக்கும்,” எனப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டினார்.

முன்னாள் இந்திய வீராங்கனைகள் பலர், அங்கீகாரமும், பணமும் இல்லாத காலத்தில், ரயில்வே சலுகைக்காக வரிசையில் நின்று, மாற்று ஆடுகளங்களில் பயிற்சி எடுத்த காலம் போய், இன்றைய வீராங்கனைகளுக்கு ஒப்பந்தங்கள், பயிற்சியாளர்கள், பிசியோக்கள் மற்றும் முழுநேர ஆதரவு கிடைத்துள்ளது.

உலகக் கோப்பையை வென்ற இந்தச் சிங்கப் பெண்கள், விளையாட்டு உலகில் பெண்கள் சாதிக்கத் தேவையான திறமையையும், தன்னம்பிக்கையையும் மட்டுமே நம்பினால் போதும் என்பதை நிரூபித்துள்ளனர். “இது ஒரு கோப்பை மட்டுமல்ல, இது அதிகாரமளித்தல் (Empowerment),” என பல பெண் தடகள வீரர்கள் இதைப் போற்றுகிறார்கள்.

இந்தியா முழுக்க உள்ள ஒவ்வொரு இளம் பெண்ணுக்கும், “உங்களால் முடியும்“ என்ற செய்தியை உரக்கச் சொல்லி, பல தலைமுறைகளை ஊக்கப்படுத்தக்கூடிய ஒரு பொன்னான தருணம் இது! இந்த வெற்றி, ஒரு தொடக்கம் மட்டுமே.

# கோவையில் 3 வாலிபர்கள் செய்த கொடூரம் பலாத்காரத்துக்கு பின் மதில் சுவர் ஏறி குதித்து உதவி கேட்ட மாணவி:

## காதலன் உயிருடன் காப்பாற்றப்பட்டது எப்படி? திடுக் தகவல்!



கோவையில் 3 வாலிபர்களால் கொடூரமாக கூட்டு பலாத்காரம் செய்யப்பட்ட பின், மதில் சுவர் ஏறி குதித்து குடியிருப்புவாசிகளிடம் மாணவி உதவி கேட்டுள்ளார். அவர்கள் மாணவியை அரவணைத்து தைரியம் கொடுத்து உள்ளனர். அப்போது, காதலன் வெட்டப்பட்ட சம்பவத்தை சொல்லி, அவரை போலீசார் உதவியுடன் காப்பாற்றிய தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

கோவை சித்ரா சர்வதேச விமான நிலையம் பின்புறம் உள்ள பிருந்தாவன் நகர் பகுதியில் கடந்த 2ம் தேதி இரவு கோவையை சேர்ந்த காதலனுடன் மதுரையைச் சேர்ந்த 20 வயது கல்லூரி மாணவி காரில் அமர்ந்து பேசி கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த 3 வாலிபர்கள் காதலனை அரிவாளால் வெட்டிவிட்டு மாணவியை மறைவான இடத்துக்கு தூக்கி சென்று கூட்டு பாலியல் பலாத்காரம் செய்தனர். தகவலறிந்து வந்த போலீசார் பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட மாணவி மற்றும் அவரது காதலனை மீட்டு கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

3 வாலிபர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதால் உடல் சோர்வடைந்த மாணவி அரைகுறை ஆடையுடன் தட்டுத்தடுமாறி எழுந்தார். பின்னர் அந்த இடத்தில் இருந்த மதில் சுவரை ஏறி குதித்து அந்த பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதியை நோக்கி சென்றார். அங்குள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கு சென்ற அவர் ஒரு வீட்டின் கதவை தட்டினார். ஆனால் அந்த வீட்டில் இருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததால் கதவை திறக்கவில்லை. எனவே, மாணவி அந்த வீட்டின் காலிங் பெல்லை அடித்தார். ஆனால் அந்த பெல் வேலை செய்யவில்லை.

இதனால் மாணவி அந்த குடியிருப்பின் முதல் தளத்தில் உள்ள வீட்டிற்கு சென்று அந்த வீட்டின் கதவை தட்டினார். அப்போது அந்த வீட்டில் இருந்தவர்கள் வெளியே வந்தனர். அலங்கோலமான நிலையில் நின்ற மாணவியை பார்த்து அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அப்போது மாணவி தான் 3 வாலிபர்களால் பலாத்காரம் செய்யப்பட்டதை கூறி அழுதுள்ளார். இந்த நேரத்தில் அந்த குடியிருப்பில் இருந்த மற்ற குடும்பத்தினரும் அங்கு வந்தனர். அவர்கள் அனைவரும் மிகவும் சோர்ந்து காணப்பட்ட மாணவியை தைரியப்படுத்தினர். தற்போது நீ பாதுகாப்பாக இருக்கிறாய் என கூறி ஆறுதல் படுத்தியுள்ளனர். மாணவியின் நிலை கண்ட அவர்கள் உடை ஏற்பாடு செய்து அணியவைத்தனர். தனது பெற்றோரிடம் பேச வேண்டும் என்று மாணவி கூறியுள்ளார். இதையடுத்து அந்த மக்கள் பெற்றோருக்கு போன் போட்டு கொடுத்துள்ளனர். பெற்றோரிடம் பேசிய மாணவி நடந்ததை தெரி-வித்துள்ளார்.

மாணவி தனது காதலனை வாலிபர்கள் தாக்கியதாக கூறி, அவரை காப்பாற்ற கூறி-யிருக்கிறார். இதையடுத்து அந்த பகுதி மக்கள் அனைவரும் மாணவியின் காதலனை தேடி சென்றனர். அதற்குள் போலீசார் அந்த இடத்துக்கு வந்து மாணவியின் ஆண் நண்பரை மீட்டு அவரிடம் விசாரித்துக்கொண்டிருந்தனர். அவரை சிகிச்சைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையில் இறங்கி-யிருந்தனர். மேலும் அவர்கள் மாணவியையும் தேடிக்கொண்டிருந்தனர். அவர்களிடம் அந்த மக்கள் மாணவி குறித்து தெரிவித்தனர். இதையடுத்து மாணவியை மீட்ட போலீசார் அவரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்திருப்பது தெரியவந்துள்ளது.

**நீதிபதி, ஆர்டிஓ விசாரணை**

மாணவியை கூட்டு பலாத்காரம் செய்த சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த சதீஷ் (எ) கருப்பசாமி (30), இவரது சகோதரர் காளி (எ) காளீஸ்வரன் (21), இவர்களது உறவினர், மதுரை மாவட்டம் கருப்பாயூரணியை சேர்ந்த குணா (எ) தவசி (20) ஆகியோரை துப்பாக்கியால் சுட்டு போலீசார் பிடித்தனர். துப்பாக்கிச்சூட்டில் கருப்பசாமி, குணாவின் இரு கால்களிலும், காளீஸ்வரனின் ஒரு காலில் குண்டு காயங்கள் ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள் கோவை அரசு மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் பொது அறுவை சிகிச்சை வார்டுக்கு மாற்றப்பட்டனர்.

இதையடுத்து போலீசார் அவர்களை கோவை அரசு மருத்துவமனையில் நீதிபதி முன்பு ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்தனர். அதற்கான மனுவை போலீசார் கோர்ட்டில் சமர்பித்தனர். இதையடுத்து, கோவை ஜெ.எம்.2 நீதிபதி அப்துல் ரகுமான் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று, கைது செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மூன்று பேரிடமும் சுமார் 1 மணி நேரத்துக்கும் மேல் நேரில் விசாரணை நடத்தினார். பின்னர் வரும் 19ம் தேதி வரை நீதிமன்றம் காவலில் வைக்க நீதிபதி அப்துல்ரகுமான் உத்தரவிட்டார். இதையடுத்து கோவை அரசு மருத்துவமனையில் உள்ள கைதிகள் வார்டில் 3 பேரும் அனுமதிக்கப்பட்டனர். தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவியிடம் நீதிபதி விசாரணை நடத்தினார். இந்நிலையில் கைதான 3 பேரையும் காவலில் எடுத்து விசாரிக்க போலீசார் முடிவு செய்துள்ளனர்.

மேலும், 3 வாலிபர்களையும் மாணவி முன்பு அடையாள அணிவகுப்பு நடத்தவும் போலீசார்

திட்டமிட்டுள்ளனர். இதற்காக நீதிமன்றத்தில் விரைவில் மனுதாக்கல் செய்ய இருப்பதாகவும் போலீசார் கூறினர். முன்னதாக பாலியல் பலாத்காரம் சம்பவம் தொடர்பாக நேற்று காலை வடக்கு ஆர்டிஓ ராமகிருஷ்ணன், கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று பாதிக்கப்பட்ட மாணவி மற்றும் அவரது காதலனிடம் நேரில் விசாரணை நடத்தினார். மேலும், பாதிக்கப்பட்ட மாணவிக்கு கவுன்சலிங் வழங்கப்பட்டு வருகிறது. மாணவி சிகிச்சை பெறும் அறை முன் 24 மணி நேரமும் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

**சிக்க வைத்த செல்போன் லொகேஷன்:**

**குற்றவாளிகளை காட்டி கொடுத்த மூன்றாம் கண்;**

தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி ஸ்கெட்ச் போட்டு தூக்கிய போலீஸ்

மாணவியை தூக்கி சென்று சுமார் 45 நிமிடம் மூவரும் கூட்டு பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. இதன் பின் மாணவி சுவர் ஏறி குதித்து குடியிருப்புவாசிகளிடம் உதவி கேட்டு போலீசாருக்கு தகவல் சென்றது. போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று இருவரையும் மீட்டனர். பலாத்காரத்தில் ஈடுபட்ட 3 வாலிபர்களும் தாங்கள் வந்த திருட்டு மொபட்டை போட்டுவிட்டு அவிநாசி சாலைக்கு நடந்து வந்துள்ளனர். பின்னர் நேரு நகர், காளப்பட்டி, சிட்ரா வழியாக நடந்து சென்று தப்பிக்க முயற்சித்தனர். போலீசார் 300க்கும் மேற்பட்ட கேமராக்களை ஆய்வு செய்தனர். குறிப்பாக, மாணவி பலாத்காரம் செய்யப்பட்ட இடத்தில் இருந்து வெளியே வர பொதுமக்கள் பயன்படுத்தும் 10 வழித்தடங்களில் உள்ள கேமராக்களை ஆய்வு செய்தனர்.

அப்போது ஒரு வழித்தடத்தில் இருந்து 3 வாலிபர்கள் வெளியே வருவது பதிவாகி இருந்தது. அவர்கள் அந்த வழியாக வந்து அங்குள்ள ஒரு டீக்கடையில் டீ குடித்துள்ளனர். சம்பவ இடத்தில் கிடைத்த திருட்டு மொபட் தொடர்பான விசாரணையில் போலீசார் ஈடுபட்டனர். அப்போது அந்த மொபட் 4 நாட்களுக்கு முன்பு கோவில்பாளையத்தில் திருடப்பட்டது என தெரியவந்தது. எனவே, அந்த மொபட் திருடப்பட்ட இடத்தில் கிடைத்த கேமரா காட்சியையும், பலாத்கார சம்பவம் நடந்த இடத்தில் கிடைத்த கேமரா காட்சியையும் ஒப்பிட்டு பார்த்தனர். அப்போது மொபட் திருடிச்சென்ற நபர்களும், பலாத்காரம் செய்யப்பட்ட இடத்தில் இருந்து வந்த 3 பேரும் ஒரே நபர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவ இடத்தில் இருந்து மாணவியின் செல்போனையும், காதலனின் ஐபோனையும் பலாத்காரத்தில் ஈடுபட்ட வாலிபர்கள் திருடிச் சென்றனர். எனவே, போலீசார் அந்த செல்போன்களின் லொகேஷனை ஆய்வு செய்துகொண்டே இருந்தனர். சம்பவம் நடந்தது முதல் ஆப் செய்யப்பட்டிருந்த காதலனின் ஐபோன் 3ம் தேதி மதியம் ஆன் செய்யப்பட்டது. இதையடுத்து டவர் லொகேஷன் காட்டிய இடத்துக்கு போலீசார் சென்று விசாரித்தனர். அப்போது அந்த வாலிபர்கள் ஐபோனை ஒரு கடையில் விற்பனை செய்ய முயன்றது தெரியவந்தது. எனவே, போலீசார் அங்குள்ள சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்தனர். இவ்வாறு பல்வேறு இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட சிசிடிவி கேமரா காட்சிகளில் பதிவாகி இருந்த 3 பேரின் உருவத்தை தொழில்நுட்ப உதவியுடன் முக அடையாளம் கண்டனர்.

பின்னர் அந்த 3 பேரும் யார்? என்பது தொடர்பான விசாரணையில் போலீசார் இறங்கினர். இதற்காக பழைய குற்றவாளிகள், புதிய குற்றவாளிகன், சிறையில் இருந்து சமீபத்தில் வெளியே வந்த குற்றவாளிகள் ஆகியோரின் விவரங்களை ஆய்வு செய்தனர். அதை வைத்து இந்த 3 பேர் யார்? என்பதை கண்டுபிடித்தனர். அப்போது பாலியல் பலாத்காரம் செய்தது பழைய குற்றவாளிகளான சிவகங்கையை சேர்ந்த சதீஷ் என்கிற கருப்பசாமி, காளி என்கிற காளீஸ்வரன், மதுரை மாவட்டம் கருப்பாயூரணியை சேர்ந்த குணா என்கிற தவசி என்பது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவர்களை சுற்றி வளைத்து சுட்டு பிடித்துள்ளனர்.




# புதிய குடியிருப்புகள், வணிக வளாகங்களில் EV சார்ஜிங் வசதி கட்டாயம் தமிழக அரசின் புதிய உத்தரவு

மின்சார வாகன (EV) பயன்பாட்டை விரைவாக வளர்க்கும் நோக்கில், தமிழக அரசு முக்கியமான முடிவொன்றை எடுத்துள்ளது. இனி மாநிலத்தில் கட்டப்படும் அனைத்து புதிய குடியிருப்புகளிலும் மற்றும் வணிக வளாகங்களிலும் மின்சார வாகன சார்ஜிங் வசதி ஏற்படுத்துவது கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ளது இந்த மாற்றத்துக்காக கட்டிட விதிகள் திருத்தப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம், மின்சார வாகனங்களுக்கு தேவையான உள்கட்டமைப்பு மாநிலம் முழுவதும் விரைவாக உருவாகும் என்று அரசு கூறியுள்ளது மேலும் அரசின் திருத்தப்பட்ட கட்டிட நெறிமுறைகளின்படி எட்டு வீடுகளுக்கு மேற்பட்ட அல்லது 750 சதுர மீட்டர் பரப்பளவை மீறும் புதிய குடியிருப்புகளில், ஒவ்வொரு வாகனத்திற்கும் மின்சார சார்ஜிங் வசதி இருக்க வேண்டும்.

மேலும் 50 வீடுகளுக்கும் மேற்பட்ட பெரிய அடுக்குமாடி குடியிருப்புகள் என்றால், அங்கு வசிப்போர் மட்டுமல்லாமல், வெளியிலிருந்து வருவோருக்கும் பயன்படுத்தும் வகையில் பொது சார்ஜிங் நிலையம் அமைக்கப்பட வேண்டும். இந்த புதிய விதி குடியிருப்புகள் மட்டுமல்லாமல், வணிக மற்றும் தொழில்துறை நிறுவனங்களுக்கும் பொருந்தும். மேலும் 300 சதுர மீட்டர் பரப்பளவை மீறும் தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள் அனைத்தும், தங்களது வளாகத்திற்குள் மின்சார வாகன சார்ஜிங் வசதி ஏற்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த முன்னோடி நடவடிக்கை, மாநிலத்தை மின்சார வாகனப் பயன்பாட்டில் முன்னணியில் நிறுத்தும் முயற்சியாக கருதப்படுகிறது.

அதன் மூலம், மின்சார வாகன ஓட்டிகள் எளிதில் சார்ஜிங் வசதி பெற முடியும், சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்கும் முயற்சிக்கும் துணை நிற்கும், மேலும் மாநிலம் முழுவதும் EV விற்பனை மற்றும் பயன்பாடு கணிசமாக உயரும் என தொழில் மற்றும் சுற்றுச்சூழல் வல்லுநர்கள் நம்புகின்றனர். மேலும் தமிழகத்தின் நகர்புற வளர்ச்சியிலும், சுத்தமான ஆற்றல் சார்ந்த போக்குவரத்திலும் புதிய கட்டத்தைக் குறிக்கும் வகையில், இந்த விதித்திருத்தம் ஒரு மாற்றுத்திறன் கொண்ட முடிவாக பார்க்கப்படுகிறது.








| Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S** |
|---|---|---|---|


TAMILNI
PRINTZ & GRAPHICS
ALL TYPE OF PRINTING & GRAPHICS SOLUTIONS
DTP தமிழ் / ENGLISH | PRINTOUT | LAMINATION
DESIGN: NEWSPAPER | MAGAZINE | BILL BOOKS
LETTERPAD | LOGO | FLEX / VINYL | POSTER
WEBSITE
DESIGN
SERVICE
APPLY
PAN CARD
PASSPORT
ALL
ONLINE
SERVICE
DESIGN
MAGAZINE
NEWSPAPER
NEWS
ADDRESS:
3/885, PILLAIYAR KOVIL STREET, METTUKUPPAM, OMR,
CHENNAI - 600097,
EMAIL: rsprintzy@gmail.com
PH.: 044-3590 6002
MOB.: 8754582123 / 9962245338

**PENA KURAL,** Tamil Monthly - November 2025
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Administrative Office:
**3/885, Pillaiyar Kovil Street, (Opp to Perumal Temple) Mettukuppam, OMR, Chennai - 600097.**
Contact No.: **044 - 35906002, 87545 82123** Email: **info@penakural.com**

